T03925
R001107

"சச்சிதாநந்தம்" வெளியீடு-3

ஸ்ரீ
வைதிக தர்ம சங்கம் தமிழ் சேவை,
"ஆர்ய மத பாடசாலை"
தஞ்சாவூர்.
எண்.........தேதி.................

ஸ்ரீ ரஸ்து.



18

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யவர்ய

ஸ்ரீமத் சங்கர பகவத் பாதாசார்யாள்

இயற்றிய

# சிவாநந்தலஹரீ

(தமிழ்க் கருத்துரையுடன் கூடியது)

"சச்சிதாநந்தம்" ஆபீஸ்,

நுங்கம்பாக்கம், சென்னை.

விலை அணா 4.

நாதன் பிரஸ்,

நுங்கம்பாக்கம், சென்னை.

1935.

3925

(All Rights Reserved)

## ஸ்ரீ குருபாதுகா ஸ்துதி.

ஸ்ரீகோவர்த்தன பீடாதிபதி ஸ்ரீ பூரி சங்கராசார்யஸ்வாமிகளால் இயற்றப்பட்டது. தேவநாகரம், கிரந்தம், தமிழ், எழுத்துக்களில் அச்சிடப்பட்டது. ஆண் பெண் யாவரும் பாராயணம் செய்து பயனடைய பிரசுரிக்கப்பட்டது.

விலை அணா **3**. வெளியூர்வாசிகள் **0-3-6** தபால்பில்லை யனுப்பிப் பெறலாம்.

ஸ்ரீ சங்கராச்சார்யஸ்வாமிகள் இயற்றிய

## "சிவாநந்தலஹரீ"

தமிழில் சிறந்த கருத்துரையுடன் முதன் முதல் உயர்ந்த நடையில் வெளியிடப்பட்டது. ஸ்வாமிகளது படங்கள் வெளியில் உள்ளது. விலை 0—4—0; வெளியூர் வாசிகள் 5 அணாவுக்கு தபால் பில்லை அனுப்பிப் பெறலாம்.

"சச்சிதாநந்தம்" ஆபீஸ்,

நுங்கம்பாக்கம், சென்னை.

---

உயர்ந்தவித பைண்டு வால்யூம்

ஸ்ரீமுக வருஷத்து

## "சச்சிதாநந்தம்"

ஸ்ரீ பூரி கோவர்த்தன பீடாதிபதிகள், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள், ஸ்ரீ நெரிஞ்சிப்பேட்டை ஸ்ரீ மடாதிபதிகள், ஸ்ரீ சேந்தமங்கலம் பிரம்மேந்த் ராவதூதஸ்வாமிகள், முதலிய பெரியவர்களது அன்பும், ஆசீர்வாதமும் கிடைக்கப்பெற்றது.

**வால்யூம் : 1 :: ஸ்ரீமுக (1933-1934).**

**விலை ரூ 1—4—0;**

தபாற்கூலி பிரத்தியேகம்.

"சச்சிதாநந்தம்" ஆபீஸ், நுங்கம்பாக்கம், சென்னை.

ஸ்ரீ ரஸ்து



ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யவர்ய

ஸ்ரீமத் சங்கர பகவத் பாதாசார்யாள்

இயற்றிய

# சிவாநந்தலஹரீ

(தமிழ்க் கருத்துரையுடன் கூடியது)

“ சச்சிதாநந்தம் ” ஆபீஸ்,

நுங்கம்பாக்கம், சென்னை.

விலை அணா 4.

நாதன் பிரஸ்,

நுங்கம்பாக்கம், சென்னை.

1935.

(*All Rights Reserved*)

ஸ்ரீ குருப்யோ நம:


உலகத்தில் மானிடப் பிறப்பே எல்லாப்பிறவிகளிலும் உயர்வான தென்றும், அதிலும் கூன், குருடு, ஊமை, முதலான அங்கக் குறைவில்லாதிருப்பது உயர்ந்த தென்றும், விளக்க வைக்கும் மனித ஜன்மமே பாவ புண்யப் பகுத்தறிவு அடைந்து, இப்பிறப்பினாலேயே அடையத்தக்க ஆன்மலாபத்தை அடையச் சாதனமாக, கடவுளின் இயற்கை விளக்கமாகிய அருளைப் பெற அஞ்ஞானமாம் இருளை பொழித்து கதிரவனொளியென விளங்கும் குருவினது உபதேசம் பெற்று, அவ்வழி நின்று அக்கடவுளை நினைந்து நினைந்து பக்தி மேலிட்டால் அழியாவானந்தம் பெற்ற ஆன்றோர்கள் அவதரித்த நாடே இப்பரத கண்டம். அத்தகைய ஆன்றோர்களில் முதன்மை நிலையை வகித்த ஸ்ரீசங்கரபகவத்பாதாள் இந்நாட்டில் தோன்றி, அக்காலத்திருந்த அறுவகைச் சமய பேதங்களை யறுத்து சமரஸப் படுத்தி, அவைகளிலுள்ள மாசுகளை நீக்கி ஷண்மதஸ்தாபகராய் விளங்கி, மானிடர் யாவரும் தம்போன்று பக்திபெற்றுப் பரமனைப் பணிந்து பிறவிப் பயனைப் பெற, தம் திருவாக்கால் இயற்றிய பல் வகைக் கிரந்தங்களில் 'சிவாநந்த லஹரீ' என்ற ஸ்தோத்திர நூல் முதலணியில் வைக்கத் தகுந்த தென்பது யாவருமறிவர்.

உயர்ந்த நடை, பக்தி ரஸப்பெருக்கு, முதலிய சிறந்த லக்ஷணங்கள் செறிந்த இந்நூலை, வடமொழிப்பயிற்சியற்ற சிற்றறிவுடைய என்போல்வார், தமிழில் சுவைகுன்றாது மொழிபெயர்த்து வெளியிட எத்தனிப்பது துணிகரச் செயலென அறிவேன்.

ஆயினும் எனது ஆசார்ய திலகரான ஸ்ரீ பூரி கோவர்த்தன பீடாதிபதிகளான ஸ்ரீஜத்குரு ஸ்ரீ சங்கர ஆச்சார்யாளின் ஆசிபெற்று, என்னால் வெளியிடப்படும் "சச்சிதாநந்தம்" எனும் மாதாந்தப் பத்திரிகையில் சிறுகச் சிறுக வெழுதியுள்ளதை, புத்தக ரூபமாய் வெளியிடத் துணிந்தேன்.

இதனை ஆஸ்திகர்கள் அனைவரும் பெற்றுப்படித்து, குற்றம் நீக்கிக் குணத்தைக் கொண்டு, ஆதரிக்க வேண்டுகிறேன். இதனை யாவரும் படித்துப் பயன் பெற்று எனது ஆச்சார்ய ஸ்வாமிகளது கருணைக்குப் பாத்திரர்களாகுமாறு எல்லாம்வல்ல இறைவனை வணங்குவோம்.

நுங்கம்பாக்கம். **K.** ஜகதீச அய்யர்.



ஸ்ரீ பூரி கோவர்த்தன பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு
ஸ்ரீ சங்கராசார்ய ஸ்ரீ பாரதி கிருஷ்ணதீர்த்த யதீந்த்ர
ஸ்வாமி மகராஜ், ஜகந்நாதம்.

இப்பெரியாரது ஆசீர்வாதம் பெற்றே நமது "சச்சிதாநந்தம்" பத்திரிகையில் ஸ்ரீஜகத்குரு ஆச்சார்யாள் இயற்றிய "சிவாநந்தலஹரீ" யின் கருத்துரையைத் தமிழில் வெளியிட்டோம்.

K. ஜகதீச அய்யர்.

# சிவானந்தலஹரீ.

இந்த கிரந்தம் ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாள் இயற்றியது. சிவமாயிருக்கும் பார்வதி பரமேச்வரர்களா லுண்டுபண்ணப்பட்ட ஆநந்தப் பெருக்கினுல் சொல்லப்பட்டது. மனிதர்களது அஞ்ஞானத்தை நீக்கி, பக்திரஸத்தையூட்டி ஸ்ரீ சிவபெருமானது அன்பையும் அருளையும் விளைவிக்கக் கூடியது. உயர்ந்தவிதமான ஸ்தோத்திர நூலாகிய இக்கிரந்தம் உலகினர்க்கு இம்மை மறுமைப் பயனை அளிக்கவல்லது. இந்நூலே அதன் மீதுள்ள வாஞ்சையால் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டிருக்கிறது.

பரமேஸ்வரனை ஸ்தோத்திரம் செய்ய ஆரம்பிக்கும் பரமபூஜ்யரான ஸ்ரீமத் சங்காராசாரியார், அப்பகவானை நமஸ்கரித்ததன் மகிமையாலேயே மானிடர் சகல சம்பத்துக்களையும் பெற்று, சம்ஸார சாகரத்தைக் கடந்து பிறவிப்பயன் பெறுவார் என்று போதிக்கும் இந்நூல் யாதொரு விக்கினமுமின்றி முடியுமாறு அப்பெருமானது நமஸ்காரரூபமான மங்கள ச்லோகத்தைக் கூறுகிறுர்.

1. "கலாப்யாம், சூடாலங்க்ருத சசிகலாப்யாம், நிஜதப:பலாப்யாம், பக்தேஷு ப்ரகடித பலாப்யாம், பவது மே | சிவாப்யாம், அஸ்தோகத்ரிபுவன சிவாப்யாம், ஹ்ருதி, புனர்பவாப்யாம், ஆநந்தஸ்புரதனு பவாப்யாம், நதி:இயம். ||"

என்றுற் செய்யப்படும் இந்நமஸ்காரம் ஸ்ரீ பார்வதி பரமேச்வரர்களின் பொருட்டு ஆகட்டும். அவர்களே வேதம் முதலான சகல வித்யாஸ்வரூபிகள்; ஜடையில் சந்திரனது கலைகளைத்தரித்திருப்பவர்கள்; நிஜமானவகையில் தவம் செய்வோர், ஸ்ரீ பார்வதி அல்லது பரமசிவன் இவர்களில் யாதொருவரை நோக்கி தவம் செய்தாலும் மற்றவரும் அத்தவத்தின் பயனைத் தருகிறவர்கள்; தம்பக்தர்களுக்கு தர்மாதிபலன்களை கொடுப்பவர்கள்; திரிபுவனங்களுக்கும் சர்வமங்களத்தைச் செய்பவர்கள்; பக்தர்கள் எவ்வெந்த விதமாய் தியானிக்கிறுர்களோ அந்தந்தவிதமாக அவர்கள் மனதில் தோன்றுபவர்கள்; அவ்வாறு தியானிப்போர்க்கு கொடுத்துங்

குறையாத ஆநந்தமேலீட்டை அளிப்பவர்கள்; ஆகையால் நாம் அவர்களைப் பணிவோம்.

**2.** "களந்தீ, சம்போ, த்வச்சரிதஸரித: கில்பிஷரஜோ தளந்தீ, தீகுல்யா ஸரணீஷு பதந்தீ, விஜயதாம் | திசந்தீ, ஸம்ஸார ப்ரமண பரிதாபோபசமனம், வஸந்தீ, மச்சேதோஹ்ருத புவி சிவாநந்தலஹரீ ||"

ஹே, ஸுக காரணரே, உம்மால் உண்டுபண்ணப்பட்ட ஆநந்தப் பெருக்கானது, எல்லாவற்றிற்கும் மேலாய் விளங்குகிறது. எனெனில் அவ்வாநந்தம் உமது திவ்விய சரித்திரமாகிய நதியிலிருந்து பெருகுகிறது; பாவமாகிய தூளி அழுக்கைப் போக்கடிக்கிறது; புத்திகளான வாய்க்கால்களின் வரிசைகளில் பாய்ந்து வருகிறது; இன்னும் ஜனனம், மரணம் எனும் சம்சார சக்கிரத்தில் சுற்றிவருவதாலுண்டாகும் துக்கத்தை நீக்கி சாந்தத்தை அளிக்கிறது; அதுவன்றி என்மனதாகிற மடுவில் தங்கியிருக்கிறது.

**3.** "த்ரயீவேத்யம், ஹ்ருத்யம், த்ரிபுரஹரமாத்யம், த்ரிணயனம், ஜடாபாரோதாரம், சலதுரக ஹாரம், ம்ருகதரம் | மகாதேவந்தேவம், மயிஸதய பாவம், பசுபதிம், சிதாலம்பம், ஸாம்பம், சிவம் அதிவிடம்பம் ஹ்ருதிபஜே ||"

நான் என் மனதில், அப்பரமசிவனையே, தியானிக்கிறேன். அவர் யார் எனில், மூன்று வேதங்களால் அறியத்தக்கவர்; மனதிற்கு இஷ்டர்; திரிபுரங்களைக் கொன்றவர் (ஸ்தூல சூக்ஷ்ம காரண சரீரங்களை நாசம் செய்கிறவர்;) ஆதிக்கும் ஆதியாயுள்ளவர்; மூன்று கண்களுடையவர்; அதிகமான ஜடாபாரத்தாற் கம்பீரமாயிருப்பவர்; அசைந்து கொண்டிருக்கும் பாம்புகளை ஆபரணங்களாய் அணிபவர்; கையில் மானைத்தரித்தவர்; தேவர்களெல்லோர்க்கும் தேவராயுள்ள மகாதேவர்; எப்போதும் பிரகாசத்துடனிருப்பவர்; என் மீது கருணை கொண்டிருப்பவர்; சகல ஜீவர்களுக்கும் பதியாய் விளங்குபவர்; ஸ்வரூப ஞானத்திற்கு ஆதாரானவர்; அம்பாளுடன் கூடியவர்; பிராப்தியடையும் காலானுகாரியானவர்; ஆகையால் அவரையே தியானம் செய்வேன்.

4. "ஸஹஸ்ரம் வர்த்தந்தே ஜகதி விபுதா: க்ஷுத்ர பலதா:, நமன்யே ஸ்வப்நேவா தத்நு ஸரணம் தத்க்ருதபலம் | ஹரிப்ரும்மாதீனமபி நிகடபாஜாம் அஸுலபம் சிரம்யாசே, சம்போ, சிவ, தவ பதாம்போஜ பஜனம் ||"

உலகத்தில் வெகு அற்பமான பிரயோஜனங்களை அளிக்கவல்ல ஆயிரக்கணக்கான தேவர்கள் இருக்கின்றார்கள். ஆயினும் நான் கனவிலுங்கூட, அத்தேவர்களையும் அத்தேவர்களால் அளிக்கக்கூடிய பிரயோஜனத்தையும், கருதுகிறேனில்லை. ஏனென்றால், ஹே, ஸுககாரணரே, மங்களமூர்த்தியே, உமது ஸமீபத்தேயிருக்கும் ஹரி, பிரும்மா, முதலானவர்களுக்குங் கிடைத்தற்கரிய உம்முடைய தாமரை மலர்போன்ற திருவடிகளின் ஸேவையையே நான் வெகுகாலமாய் யாசித்து வருபவனல்லவா?

5. "ஸ்ம்ருதௌ, சாஸ்த்ரே, வைத்யே, சகுனவிதா கானபணிதௌ, புராணே, மந்த்ரேவா, ஸ்துதி நடன ஹாஸ்யேஷ்வ அசதுர: | கதம் ராக்ஞாம் ப்ரீதிர்பவதி, மயி, கோஹம், பசுபதே, பசும்மாம், ஸர்வக்ஞ, ப்ரதித, க்ருபயா பாலய, விபோ. ||"

ஹே, ஸர்வேசனே, மனுமுதலானவர்கள் இயற்றியதர்ம சாஸ்திரங்கள், வியாகர்ணம் தர்க்கம் முதலான இதர சாஸ்திரங்கள், தன்வந்தரி முதலானவர்கள் விளக்கிய வைத்தியம், சகுன சாஸ்திரம், கவிகள் பாடுவதற்கான கவன இலக்ஷணங்கள், ஸங்கீதம், புராணங்கள், மந்திரசாஸ்திரம், முகஸ்துத்யம், நாட்டியம், ஹாஸ்யம் இவைபோன்ற எத்துறையிலும் சிறிது கூடத்தெரியாதவனாக நான் இருக்கிறேன். ஆதலால் என்மீது இப்புவியிலுள்ள ஒரு அரசனுக்காவது பிரியம் ஏற்படக் காரணமுமில்லை. நீரோ எல்லாம் அறிந்தவர், பெரியகியாதியடைந்தவர், எங்கும் நிறைந்துள்ளவர், ஆகையால் பசுவாயும் நான் யார் என்றும் அறியாதவனாயும் உள்ள என்னை உமது அளவற்ற கிருபையால் காப்பாற்றுவீர்.

6. "கடோவா ம்ருத் பிண்டோப்யணுரபிச, தூமோக்நி ரசல:, படோவா, தந்தூர்வா, பரிஹரதிகிம் கோரசமனம் | வ்ருதா கண்டக்ஷோபம் வஹஸி, தரஸா, தர்க்க வசஸா, பதாம்போஜம் சம்போ: பஜ, பரமஸௌக்யம் வ்ருஜ, ஸுதீ: ||

ஹே, நல்ல புத்தியைப் பெற்றவனே, குடமாவது, மண்கட்டியாவது, பரமாணுவாவது, புகையாவது, நெருப்பாவது, பர்வத

மாவது, துணியாவது, நூலாவது, பயத்தை உண்டு பண்ணும் இயமனைபோய்விடச் செய்யுமா? தர்க்கசாஸ்திரத்தில் உள்ள வார்த்தைகளைக் கொண்டு உன் தொண்டையில் வைத்து சிரமத்துடன் உன் காலத்தை வீணாகக் கழிக்கிறாயே! ஸுகத்தைக் கொடுக்கும் பரமசிவனுடைய தாமரைப் பூப்போன்ற திருக்கழலை தியானம் செய்வாய்; அவ்வாறு செய்வாயாயின் நீ மேம்பட்ட ஸௌக்கியத்தை (மோக்ஷத்தை) அடைவாய்.

**7.** "மனஸ்தே பாதாப்ஜே நிவஸது, வச: ஸ்தோத்ர பணிதௌ,
கரௌசாப்யர்ச்சாயாம் ச்ருதி: அபிகதாகர்ண நவிதௌ |
தத்த்யானே புத்தி: நயனயுகளம் மூர்த்திவிபவே பரக்ரந்தான்
கைர்வா, பரமசிவ, ஜானே, பரமத: ||"

ஹே, பரமசிவனே, இந்தமனமானது உம்முடைய தாமரைத் திருவடியில் வஸிப்பதிலும், வார்த்தையானது உம்ஸ்துதியையே கூறும் கிரந்தங்களைச் சொல்லுவதிலும், இருகைகளும் உம்மை அருச்சிப்பதிலும், காதுகள் உமது சிறந்த கதைகளைக்கேட்பதிலும், புத்தியானது உம்மையே தியானிப்பதிலும், கண்களிரண்டும் உமது திவ்விய திருமேனியைக்கண்டு களிப்பதிலும், உபயோகப்படட்டும். அவ்வாறு நீர் அனுக்கிரகம் செய்தபின் எந்த இந்திரியம் இதர கிரந்தங்களை தெரிந்து கொள்ள வியலும்? நான் அறியமாட்டேன்.

**8.** "யதா புத்தி: சுக்தௌ ரஜதமிதி காசாச்மனி மணிர்ஜலே
பைஷ்டே க்ஷீரம் பவதி ம்ருகத்ருஷ்ணாஸு ஸலிலம் | ததா
தேவப்ராந்த்யா பஜதி, பவதந்யஞ்ஜடஜனோ மகாதேவம் த்வாம்
மனஸிச நமத்வா, பசுபதே ||"

ஹே, பசுபதே, மகாதேவரே, சிப்பியில் வெள்ளியென்றும், மாவுகலந்த நீரில் பாலென்றும், கானல்நீரில் அருந்தத்தக்க தண்ணீரென்றும், புத்தி எவ்வாறு உண்டாக்கிக் கொள்ளுகிறதோ, அதே விதமாக, இம்மூடமனிதன் ஈசுவரரான உம்மை மனத்தால் எண்ணாமல், உம்மைத் தவிர்த்த மற்றவைகளை ஈசுவரனென்று பிரமையினால் பூஜிக்கிறான். அந்தோ!

**9.** "கபீரே, கர்ஸாரே, விசதி விஜனே கோரவிபினே, விசாலே
சைலே சப்ரமதி குஸுமார்த்தம் ஜடமதி: | ஸமர்ப்யைகஞ்
சேதஸ் ஸரஸிஜம், உமாநாத, பவதே ஸுகேன வஸ்தாதும்
ஜன இஹ நஜானாதி கிமஹோ ||

ஹே, உமாபதியே, ஜனங்கள் ஆழமான மடுருகளிலும் ஜனசஞ்சாரமில்லாத பயங்கரமான காடுகளிலும் விசாலமான மலைகளிலும் புஷ்பங்களை சேகரிக்கச் செல்லுகிறார்கள்; சுற்றிச் சுற்றியும் திரிகிறார்கள். என்னமதியீனம்! ஒரே வஸ்துவான மனதான தாமரைப் புஷ்பத்தை உம்மிடம் ஸமர்ப்பித்து இவ்விடம் சுகமாக இருக்க அவர்கள் ஏன் அறியவில்லை! இது வெகு ஆச்சரியமே!

**10.** "நரத்வம் தேவத்வம் நகவன ம்ருகத்வம் மசகதா பசுத்வம் கீடத்வம் பவது விஹகத்வாதி ஜனனம் | ஸதா த்வத்பாதாப்ஜ ஸ்மரண பரமாநந்தலஹரீ விஹாரா ஸக்தஞ்சேத் ஹ்ருதய மிஹ கிந்தேன வபுஷா. ||"

மனிதன், தேவன், மலைகாடு பிரதேசங்களில் உள்ள துஷ்ட மிருகங்கள், கொசுகு, பசு, புழு, பக்ஷி முதலான எந்தவகை ஜன்மம் எனக்கு உண்டாயினும் உண்டாகட்டும். இத்தகைய ஜன்மங்களில் உண்டாகும் எனது ஜன்மத்தில் என்மனம் மட்டும் எப்போதும் உமது தாமரைத் திருவடிகளையே தியானித்து, அதனால் உண்டாகும் ஆநந்தப்பிரவாகத்திலே அமிழ்ந்து, விளையாடுவதிலேயே ஆசையை உடையதாயிருக்குமானால், அவ்வித ஜன்மத்திற்குத் தகுதியான சரீரத்தால் எனக்கு என்ன கெடுதல் உண்டாகக்கூடும்? ஒன்றுமில்லையன்றோ!

**11.** "வடுர்வா, கேஹீவா யதிரபிஜடீவா, ததிதரோ நரோவா, ய:கச்சித்பவது பவ கிந்தேன பவதி | யதீயம் ஹ்ருத்பத்மம் யதிபவத தீநம், பசுபதே, ததீய: த்வம் சம்போ, பவஸி பவ பாரஞ்ச வஹஸி ||"

ஹே, பரமசிவ, பிரமசாரியன், கிரகஸ்தன், ஸன்னியாசி, வானப் பிரஸ்தன் ஜடையையுடையவன், இவர்களைச் சேராத வேறு மனிதன், ஆக எந்த விதமான தேகமுடையவனாயினும் நான் யாதொரு கெடுதலும் உண்டாகக் கூடியது என்று கொஞ்சமும் நினைக்கவில்லை. ஆயினும், ஹே, சர்வேசா, எவன் தனது மனதெனும் தாமரைப் பூவில் உம்மையிருக்கும்படிச் செய்கிறானோ, அப்பொழுது நீர் அவனைச் சேர்ந்தவராக ஆகிறீரன்றோ? அவ்விதமாகச் சேர்ந்தபின் நீர் அவனது ஸம்ஸாரமென்ற ஜனனமரண பாரத்தையும் சுமக்கிறீர். இதன் காரணம் நீர் உயர்ந்த சுககாரணனாயிருப்பதுவே.

**12.** "குஹாயாம் கேஹாவா பஹிரபிவநோவா த்ரிசிகரே ஜலேவா வஹ்நௌவா வஸது வஸதே: கிம்வாதபலம் | ஸதா யஸ்வாந்த: கரணமபி சம்போ, தவ பதேஸ்திதஞ் சேத்யோகோஸௌ ஸச பரமயோகி, ஸசஸுகீ ||"

மலையின் குகையிலாவது, வீட்டிலாவது, பரந்த வெளிப்பிரதேசத்திலாவது, பர்வத உச்சியிலாவது, தண்ணீரிலாவது, நெருப்பிலாவது, இருந்துகொண்டு யெவனும் வஸிக்கட்டும். அவ்வாறு வசித்தால் யாது பிரயோஜனம் என்று நீரே சொல்வீர். அதில் ஒன்றுமில்லை. ஆயினும், ஹே, சம்போ, எவனுடைய அந்தக்கரணமானது எப்போதும் உமது பாதங்களிலேயே நிலைத்து நிற்குமோ அதுவே யோகம் எனப்படும். அவனே பரமயோகி எனப்படுவான். அவன்தான் ஸுகத்தை அனுபவிப்பவனுவன் (மோக்ஷத்துக்குரியவன்.)

**13.** "அஸாரே ஸம்ஸாரே நிஜபஜன தூரே ஜடதியா ப்ரமந்தம் மாமந்தம் பரமக்ருபயா பாதுமுசிதம் | மதந்ய: கோதீனஸ்தவ க்ருபணரக்ஷாதி நிபுணஸ்த்வதந்ய: கோவா மே த்ரிஜகதி சரண்ய: பசுபதே. ||

ஹே, பசுபதியே, ஸாரமில்லாததும், வாஸ்தவமாயுள்ள (தன் ஸ்வரூபமாயுள்ள) பரமாத்மாவை பஜிக்கும் விஷயத்துக்கு தூரத்தேயிருப்பதுமான, ஜனனமரண மென்ற ஸம்ஸாரத்தில், இது நன்மை, இது தீமை என்று பகுத்தறிவு இல்லாத மூடபுத்தியினல், சுழன்று சுழன்று வருகிறவனுயும், ஞானம் எனும் தேஜஸைக் கண்டு அறியக் கூடாத குருடனுகவும், இருக்கும் என்னை உமது பெருமை பொருந்திய கிருபையினுல் காப்பாற்றுவது உசிதமாகும். ஏனென்ருல், என்னைவிட தீனன் (எளியவன்) இவ்வுலகத்தில் ஒருவருமில்லை; தீனர்களைக் காப்பாற்றுவதில் மிகுந்த நிபுணன் உம்மை விடவேறு ஒருவருமில்லை! இன்னும் சரண் என்று அண்டினவர்களைக் காப்பாற்றும் சக்தியைப் பெற்றவர் இம்மூவுலகத்திலும் உம்மைத் தவிர்த்து வேறுயார்தான் இருக்கிருர்? வேறு ஒருவரும் இல்லையல்லவா!

**14.** "ப்ரபுஸ்த்வம் தீனானாம் கலுபரமபந்து:, பசுபதே, ப்ரமுக்யோ அஹம் தேஷாமபி கிமுதா பந்துத்வமனயோ: | த்வயைவ க்ஷந்தவ்யா:, சிவ, மதபராதாச்ச ஸகலா: ப்ரயத்நாத்கர்த்தவ்யம் மதவநமியம் பந்துஸரணி: || "

ஹே, ஸர்வேசா, நினைத்தது எல்லாம் செய்யவல்லவரான நீர் பரம எளியோர்களுக்கு சிலாக்கியமான உறவினரல்லவா! அந்த எளியோர்களுக்குள் நான் முதன்மை பெற்றவனல்லவா? ஆகையால் நம்மிருவருக்கும் உள்ள பந்துத்தன்மையை நான் எடுத்துக் கூற அவசியமேயில்லையன்றோ? ஹே, மங்களகரனே, என்னால் எல்லாவகையாலும் செய்யப்பட்ட குற்றங்களனைத்தும் உம்மால் பொறுத்துக் கொள்ளத் தக்கவைகளே. இன்னும் என்னைக் காப்பாற்ற முயற்சியும் நீரே எடுத்துச் செய்யத்தக்கதே. ஏனெனில் இவ்வாறு செய்வதுதான் உறவினர்களுக்குள் ஒழுங்கல்லவா?

**15.** "உபேக்ஷாநோசேத்கிம் ந ஹரஸி பவத்யான விமுகாம் துராசாபூயிஷ்டாம் விதிலிபிமசக்தோயதி பவான் | சிரஸ்தத் வைதாத்ரம் நநகலு ஸுவ்ருத்தம், பசுபதே, கதம்வா நிர்யத்தம் கரநகமுகேநைவ லுலிதம் || "

ஹே, பசுபதே, என்னைக்காப்பாற்றும் விஷயத்தில் உமக்கு வெறுப்பு இல்லை என்றே நான் நிச்சயிக்கிறேன். வெறுப்பு உமக்கு இல்லாதிருக்குமானால், துர் ஆசையை நிரப்ப அடைந்தும் உம்மை யண்டி தியானிக்க வொட்டாமல் தடுத்தும் இருக்கின்ற என் தலை எழுத்தை ஏன் நீர் அழித்துவிடவில்லை? நீர் அத்தலைவிதியை அழிக்கச் சக்தியற்றவராயும் இல்லையே! அவ்வாறு சக்தியற்றவராக இருந்தால் நீர் எப்படி மிக உறுதியாயிருக்கும் பிரும்மாவுடைய ஒருசிரசை வெகுசாதாரணமாய் யாதொரு முயற்சியின்றி உமது நகத்தினது நுனியால் கிள்ளினீர்! அப்படிச் செய்த நீர் வெகு சுலபமாய் அப்பிரும்மா எழுதிவிட்ட என் தலைவிதியை போக்கடிப்பீராக.

**16.** "விரிஞ்சிர்தீர்க்காயுர் பவது பவதா தத்பரசிரச்சதுஷ்கம் ஸம்ரக்ஷ்யம் ஸகலு புவிதைந்யம் லிகிதவான் | விசார: கோவா மாம் விசத க்ருபயா பாதி, சிவ, தேகடாக்ஷ வ்யாபாரஸ் ஸ்வயமபிச தீநாவநபர: ||

ஹே, நிர்மல ஸ்வரூபியே, மங்களஸ்வரூபியே, (என் தலையில் இவ்வாறு எழுதிவிட்ட) பிரமன் தீர்க்காயுளுடையவனாகவே உமது இஷ்டப்படி இருக்கட்டும். அவனுடைய எஞ்சியதலைகளும் உம்மால் நன்றாக காக்கத்தக்கவைகளாகவே இருக்கட்டும். ஆயினும் அவன் நான் இந்த அற்ப நிலைமையில் இருக்குமாறு என்தலையில் எழுதினவனல்லவா? அதையும் நான் பொருள்படுத்தவில்லை. ஏனெனில், தீனர்களைக் காப்பாற்றுவதில் ஊக்கமாய் இருக்கும் உமது கடைக்கண் பார்வை மட்டும் தானே என்னை காப்பாற்றி விடும். ஆதலால் எனக்கு ஒருவகை விசாரமும் இல்லை.

**17.** "பலாத்வா புண்யானாம் மயிகருணயாவா த்வயி, விபோ, ப்ரஸன்னேபி, ஸ்வாமின். பவதமல பாதாப்ஜ யுகளம் | கதம் பச்யேயம் மாம் ஸ்ஸ்தகயதி நமஸ் ஸம்ப்ரமஜுஷாம் நிலிம்பானாம் ச்ரேணிர் நிஜக மாணிக்ய மகுடை: || "

ஹே, எங்கும் நிறைந்தவரே, எல்லாப் பொருளையும் தன் ஸ்வாதீனமாகவுடையவரே, நல்லோரால் செய்யப்பட்ட புண்ணியத்காலோ அல்லது உமது பரம கருணையாலோ, உம்மைப் பூஜித்த மாத்திரத்தில் அவர்கட்கெதிரே தரிசனம் கொடுத்து அனுக்கிரகம் செய்துவருகிறீர். ஆனால் உமது இரண்டு பாதாரவிந்தங்களை நான் மட்டும் பார்க்கமுடியாது இருக்கிறேன். ஏனென்றால் உம்மை நமஸ்கரிப்பதில் வெகு பரப்பரப்புக் கொண்ட தேவர்களது கூட்டம் சதாகாலம் உம்மைச் சுற்றியிருப்பதால் அவர்களது தங்கத்தாற் செய்யப்பட்ட மாணிக்க கிரீடங்களால் நான் உம்மை பார்க்கக் கூடாதவாறு மறைக்கிறார்களே.

**18.** "த்வமேகோ லோகானாம் பரமபலதோ திவ்விய பதவீம் வஹந்தஸ்த்வன்மூலாம் புனரபி பஜந்தே ஹரிமுகா: | கியத்வா தாக்ஷிண்யந்தவ, சிவ, மதாசாச கியதீ கதா வா மத்ராக்ஷாம் வஹஸி கருணாபூரிதத்ருசா || "

ஹே, பரமசிவனே, ஜனங்களுக்கு (எல்லா உலகங்களிலும்) உயர்வான (மோக்ஷசாம்ராஜ்யம் முதலான) பலன்களை அருளுபவர் நீர். ஒருவரே. விஷ்ணு முதலான தேவர்கள் எல்லோரும் உமது (அருள் எனும்) காரணத்தாலே உம்மால் கொடுக்கப்பட்ட தைவீக பதவிகளை (வைகுந்தம் முதலான இருப்பிடங்களிலிருந்து)

வகித்து வருகிறார்கள். மறுபடியும் அவர்கள் எல்லோரும் உம்மை பூஜித்து வருகிறார்கள். ஆகையால் உமது தாக்ஷிண்யம் என்ற பிறர் கள் கருதியதை அடையச் செய்யும் தன்மையை யார்தான் அள வெடுத்துக் கூறல் முடியும்? ஆயினும் ஒரு விசேஷமுள்ளது. உமது உபாஸனையின் பயன் எவ்வாறு அளவிட முடியாதோ, அதுபோல என்னுடைய ஆசையும் யாரால் அளவிட முடியாததே, ஆதலால் என்னை ரக்ஷிக்கவேணும். அவ்வாறு ரக்ஷிக்க உமது கருணை நிறைந்த கடாக்ஷத்தை எப்போது என் மீது செலுத்துவீர்?

**19.** "துராசாபூயிஷ்டே துரதி பக்ரகத்வாரகடகே துரந்தே ஸம் ஸாரே துரித நிலயே துஃகஜநகே | மதாயாஸம் கிம் நவ்ய பநயஸி கஸ்யோபக்ருதயே வதேயம் ப்ரீதிச் சேத்தவ, சிவ, க்ருதார்த்தா:கலு வயம் ||

ஹே, பரமசிவனே, யான் உழன்று வரும் இச் சம்ஸாரமாகிற பிறப் பிறப்பில் மிக துன்பப்படுவதை நீர் அறிவீர். இதில் துர் ஆசையே நிறைந்துள்ளது; அவ்வாசையைத் தீர்த்துக் கொள்ள துஷ்ட அரசர்களது கிரகத்துவாரத்தில் போய்ச் சேர வேண்டி யிருக்கிறது; அத்தகைய துன்பமும் முடிவற்றதாயிருக்கிறது; இத்துடன் இல்லாது பாபங்களுக்கு இருப்பிடமாயுமுள்ளது; துஃகத்தையே சதா உண்டு பண்ணுகிறது. அப்படி அனுபவிக்கு மாறு ஏற்பட்ட என் தலைவிதியை போக்கடிக்கிறீரா, மாட்டீரா, சொல்லும். அவ்வாறு பிரமன் எழுதிய தலைவிதியை நீர் துடைத்து விட்டால் உமது பக்தனை அப்பிரமனது பெருமை குறையுமென்று எண்ணுகிறீரா, என்ன? ஆயினும் இவ்விஷயத்தில் என் மீது உமக்கு அருள் எனும் அன்பு இருக்குமானால் நாங்கள் க்ருதார்த் தர்களாய் விடுவோம் என்பதற்கு யாது தடை?

**20.** "ஸதா மோஹாடவ்யாம் சரதி, யுவதீனாம் குசகிரௌ நடத் யாசாசா காஸ்ரு வடதி ஜடிதி ஸ்வைரமபித: | கபாலிந் பிக்ஷோ மேஹ்ருதய கபி மத்யந்தசபலம் த்ருடம் பக்த்யா பத்வா, சிவ, பவததீனம் குருவிபோ ||

ஹே, கபாலியே, பிரமனது மண்டை யோட்டைக் கையில் ஏந்தியவரே, மங்கள காரணரே, எங்கும் பூரணமாய் நிறைந்துள்ள வரே, மனமாகிய குரங்கு மோகம் என்ற காட்டிலேயே எக்காலமும் திரிகிறதே! இளமையான பெண்களது குசங்களாகிய மலையின்மீது

கூத்தாடுகிறதே! பெண்டாட்டி, பிள்ளை, சொத்து முதலான ஆசா பாசங்களென்னும் கிளைகளில் இருந்து வேகத்துடன் நாற்பக்கங் களிலும் தனதிஷ்டப்படித் தாண்டிக் குதிக்கிறதே! அவ்வாறு சலனமுள்ள எனது மனக்குரங்கை பக்தி என்ற கயிற்றைக் கொண்டு வெகு பலமாகக் கட்டி உமது வசம் இருக்கச் செய்தருள் வீர்.

**21.** "த்ருதிஸ்தம் ப்ராரம் த்ருட குண நிபத்தாம் ஸகமனாம்
விசித்ராம் பத்மாட்யாம் ப்ரதிதிவஸ ஸன்மார்க்க கடிதாம் |
ஸ்மராரே, மச்சேத:ஸ்புட படகுடீம் ப்ராப்ய விசதாம் ஜய,
ஸ்வாமிந், சக்த்யாஸஹ, சிவ, கணைஸ்ஸேவித விபோ ||

காமாந்தகரே, ஸர்வத்தையும் ஸ்வாதீனமாகக் கொண்டவரே, சுபகரரே, பிரமத கணங்களால் ஸேவிக்கப்படுவோரே, (மேற் கூறிய படி என்மனத்தை உமதுஸ்வாதீனமாக்கி விட்டீராயின்) என் மன மானது சிறந்த கூடாரமாகும். அதற்கு தைர்யம் என்ற தூண் ஆதாரமாயிருக்கும்; திரிகுண கார்ய பூதகேகாதி குணங்களால் கெட்டியாக கட்டப்பட்டுவிடும்; நினைத்த இடங்களுக்கு வெகு சுலபமாய் போகக் கூடியதாகும்; நானாவிதவர்ணங்களுடைய தாம ரைப் பூப் போன்ற சித்திரங்கள் நிறைந்துவிடும்; தினந்தோறும் அங்கு பிரும்ம விசாரம் செய்வதிலும் இதர ஸன்மார்க்க வழியிலும் ஈடுபட்டிருக்கும்; நிர்மலமான ஸ்தானமும் ஆகும்; அங்கு அப் போதுள்ள பிரகாசத்துக்கோ அளவிராது. ஆகையால் தேவரீர் அம்பிகையுடன் மனமெனும் அக்கூடாரத்தில் எழுந்தருளி மேன் மையாக விளங்குமாறு அருள் புரிவீர்.

**22.** "ப்ரலோபாத்யை ரர்த்தாஹரண பரதந்த்ரோ தநிக்ருஹே
ப்ரவேசோத்யுக்தஸ்ஸந் ப்ரமதி பஹுதா தஸ்கரபதே | இமம்
சேதச் சோரம் கதமிஹஸஹே, சங்கர விபோ, தவாதீனம்
க்ருபயா மயி நிரபராதே குருக்ருபாம் ||

ஹே, சங்கரரே, திருடர்களுக்குத் தலைவரே, எங்கும் வியாபிப்பவரே, எனது சித்தம் என்னும் திருடன், லோபம் மோஹம் முதலான குணங்கள் பெற்று பிறர்களது திரவியத்தை அபகரிப்பதிலும், தனவான்களது வீடுகளில் புகுவதற்கே முயற்சிப் பதிலும், பலவிதமாக சுற்றிவருகிறான். அச்சித்தமெனும் திருட

னுடன் ஸதாசேர்ந்திருக்க எனக்கு இனிமேல் பொறுக்க முடியாது. ஆதலால் அத்திருடனை உமது வசவாக்கி நிரபராதியான என்னிடம் தாங்கள் தயைவைத்தருள்வீர்.

**23.** "கரோமித்வத் பூஜாம் ஸபதி ஸுகதோமே பவ விபோ,
விதித்வம் விஷ்ணுத்வம் திசஸிகலு தஸ்யா:பலமிதி | புனச்ச
த்வாம் திருஷ்டும் திவி புவி வஹன் பக்ஷிம்ருகதா மத்ருஷ்ட்வா
தத்கேதம் கதமிஹ ஸஹே, சங்கரவிபோ || "

ஹே, எங்கும் நிறைந்தவரே, மங்களத்தைச் செய்பவரே, நான் உமது பூஜையையே செய்கிறேன். உடனே எனக்கு பிரம்மானந்தமான சுகத்தைக் கொடுக்கிறவராய்விடுவீர். அத்தகைய பூஜைக்குப் பிரயோஜனமாக பிரமனது பதவி அல்லது விஷ்ணுவின் பதவியை அளிக்காதீர். ஏனெனின், அவ்வித பதவியை அடைவேனாயின் அவர்களைப்போல ஆகாயத்திலும் பூமியிலும், பறவை (அன்னம்) மிருகம் (வராகம்) இவைகளது தன்மையுடன் சென்று, உமது சிரஸையும் பாதக் மலர்களையும் பார்க்க முடியாமல் அவர்களைப் போல துக்கத்தில் அமிழ்ந்து விட நேரிடும். ஆதலால் அந்நிலைமையை நான் பொறுக்க முடியாதன்றோ!

**24.** "கதாவா கைலாஸே கநகமணிஸௌதே ஸஹகணைர் வஸன்,
சம்போ, ரக்ரே ஸ்புட கடிதமூர்த்தாஞ்சலிபுட: || விபோ,
ஸாம்ப, ஸ்வாமின், பரம, சிவ, பாஹீதி நிகதன் விதாத்ருணாம்
கல்ப்பான், க்ஷணமிவ விநேஷ்யாமி ஸுகத: ||

எங்கும் வியாபித்திருப்பவரே, அம்பிகையுடன் கூடியிருப்பவரே, எல்லாவற்றையும் தன் ஸ்வாதீனத்தில் உடையவரே, மேலானவைகளுக்கும் மேலானவரே, மங்களஸ்வரூபியே, எந்த நாள் உமது கருணைக்கு பாத்திரனாகி நான் கைலாஸ பர்வதத்தில் தங்கத்தினால் கட்டப்பட்டதும் இரத்தினங்களால் இழைக்கட்டதுமான உப்பரிகையில் உமது திருச்சந்நிதியில் பிரமத கணங்களுடன் வஸித்து, ஞானதேஜஸ்ஸுடன் விளங்கி, என் சிரமீது கைகளைக் கூப்பி அஞ்ஜலிஹஸ்தனாயிருந்து, என்னைக்காப்பாற்றும், என்னைக் காப்பாற்றும் என்று குறையிரந்து, ஸுகமாக பிரமத கணங்களது கல்ப்பங்களை ஒரு க்ஷணப் பொழுதுபோல எப்போது நான் கழிப்பேனோ!

25. "ஸ்தவைர் ப்ரும்மாதீனாம் ஜயஜய வசோபிர் நியமி நாம் கணானாம் கேளீபிர் மதகல மஹோக்ஷஸ்ய ககுதி | ஸ்திதம் நீலக்ரீவம் த்ரிணயனம் உமாச்லிஷ்டவபுஷம் கதாத்வாம் பச்யேயம் கரத்ருதம்ருகம் கண்ட பரசும் ||

ஐயா, பிரமன் முதலான தேவர்களது ஸ்துதிகளோடும், ரிஷிகளது ஜயஜயவென்ற வார்த்தைகளோடும், நந்தி, பிருங்கி, சண்டி முதலான பிரமத கணங்களது பாடல் ஆடல்களோடும், சூழப்பெற்று கொழுத்துப் பெரிதாயுள்ள நந்தியினது பிடரியின் மீது வீற்றிருக்கும் நீலகண்டத்தையும், முக்கண்களையும், ஸ்ரீ பார்வதி தேவியால் ஸதா ஆலிங்கனம் செய்யப்பட்ட சரீரத்தையும், மான், மழு, பரசு இவைகளைத் தரித்தகைகளையும் உடைய உம்மை எப்போது நான் தரிசித்து ஆனந்தமடைவேன்!

26. "கதாவாத்வாம் த்ருஷ்ட்வா கிரிச, தவபவ்யாம் ப்ரியுகளம் க்ரஹீத்வா ஹஸ்தாப்யாம் சிரஸிநயனே வக்ஷஸி வஹன் | ஸமாச்லிஷ்யாக்ராய ஸ்புடஜலஜ கந்தான் பரிமளா நலப்யாம் ப்ரும்மாத்யைர் முத மனுபவிஷ்யாமி ஹ்ருதயே ||

ஹே, பர்வதத்தில் சயனித்திருக்கும் பிரபுவே, தேவரீரைத் தரிசித்து சுபத்தைக் கொடுக்கும் உபய பாதங்களையும் அடியேன் இவ்விரண்டு கைகளாலும் பிடித்து அவைகளை என் சிரசிலும் கண்களிலும் மார்பிலும் ஒற்றிக்கொண்டு ஆலிங்கனம் செய்து அப்பாதபத்மங்களிலுள்ள சுகந்த வாஸனைகளை முகர்ந்து ப்ரும்மாதி தேவர்களுக்கும் அடைவதற்கரிய கரைகடந்த ஆநந்தத்தை நான் எப்போது தான் அனுபவிக்கப் போகிறேனோ!

27. "கரஸ்தே ஹேமாத்ரௌ, கிரிச, நிகடஸ்தே தனபதௌ, க்ருஹஸ்தே ஸ்வர் பூஜாமர ஸுரபி சிந்தாமணிகணே | சிரஸ்தே சீதாம்சௌ சரணயுகளஸ்தே அகிலசுபே கமர்த்தம் தாஸ்யேஹம் பவது பதார்த்தம் மம மன: ||

ஹே, கிரிச, அருமையென்று சொல்லக் கூடிய எந்த வஸ்துவை உமக்கு அடியேன் அர்ப்பணம் செய்யக்கூடும்? தங்கமயமான மேருபர்வதமோ உமது கையில் இருக்கிறது; செல்வங்களுக்கு அதிபதியான குபேரனோ உமது பக்கத்திலேயே காத்துக் கொண்டிருக்கிறான்; தேவலோகத்திலுள்ள கல்ப விருக்ஷங்கள், காமதேனு, சிந்தாமணி முதலான கூட்டங்கள் எல்லாம் உமது

இருப்பிடத்தில் உள்ளன ; குளிர்ச்சியளிக்கவல்ல சந்திரன் சிரஸில் இருக்கிறுன் ; ஸர்வ மங்களத்தையும் செய்ய வல்லவன்மை உமது திருப்பாதங்களுக்கிருக்கின்றது ; ஆகையால் உமது வசம் இல்லாத பொருள் யாது? அதை எவ்வாறு யான் அர்ப்பணம் செய்ய வல்லேன் ; ஆயினும் உம்மிடமில்லாததும் என்னிடத்தில் மட்டும் இருக்கும்படியான குற்றம் பொருந்திய எனது மனது இருக்கிறது. அதையே தேவரீர் பெற்றுக் கொண்டு என்னை ஈடேற்றுவீர்.

**28.** "ஸாரூப்யம் தவ பூஜனே, சிவ மஹாதேவ, இதிஸங் கீர்த்தனே ஸாமீப்யம் சிவபக்தி தூர்யஜநதா ஸாங்கத்ய ஸம்பாஷணே | ஸலோக்யஞ்ச சராசராத் மகதனுத்யானே பவானீபதே, ஸாயுஜ்யம் மமஸித்தமத்ரபவதி, ஸ்வாமிந், க்ருதார்த்தோஸ்ம் யஹம் ||

ஹே, பிறப்பை ஒழிக்கும் பார்வதீ தேவியின் நாதரே, ஸர்வேசரே, உமது அருளால் நான் இந்த ஜன்மத்திலேயே கிரு தார்த்தனுக (ஜீவனின் பிரயோஜனத்தை யடைந்தவனுக) ஆய்விடுகி றேன். ஏனெனின், உமது பூஜையில் ஈடுபட்டால் (உமது உத்தம ரூபத்திலே லயப்பட்டு அதுபோன்று அடையப்பெற்று) ஸாரூப்ய பதவியை யடைவேன். உமது நாமங்களாகிய 'சிவ, மகாதேவ' என்ற சொற்களை பக்தியுடன் கூறி ஸங்கீர்த்தனம் செய்வேனுயின் (உமது ஸமீபத்திலேயே சதாகாலம் இருக்கும் பெருமையான) ஸாமீப்ய பதவியடைவேன். பக்தியிற் சிறந்த சிவபக்தி என்ற சுமையையே சுமந்து அன்பை அனுபவிக்கும் உத்தமர்களான சிவ பக்தர்களுடைய சங்கத்தில் காலங்கழிப்பேனுயின் (உம்மோடு கூட இருந்து வரத்தகுதியான) ஸாலோக்யத்தைப் பெற்றவனுவேன். அண்ட பிண்டங்களில் சராசரங்களான ரூபங்களுடனும் குணங்க ளுடனும் உள்ள உமது திருமேனியை தியானிப்பேனுயின் (உம் முடன் ஐக்கியமாகும் நிலையான) ஸாயுஜ்ய பதவியடைவேன். இவை களெல்லாம் உமது அருளால் இந்த ஜன்மத்திலேயே எனக்கு சுலப மாய் கிடைக்கக் கூடியனவாகும்.

**29.** "த்வத்பாதாம்புஜ மர்ச்சயாமி, பரமம்த்வாம் சிந்தயாமி அன்வஹம் த்வாமீசம் சரணம்வ்ரஜாமி, வசஸா த்வாமேவ யாசேவிபோ | வீக்ஷாம்மே திச சாக்ஷுஷீம் ஸகருணம் திவ்யைச் சிரம் ப்ரார்த்திதாம் சம்போ, லோகருரோ, மதீய மனஸஸ்ஸௌக் யோப தேசம் குரு ||

எங்கும் வியாபித்துள்ளவரே, தங்களது திருவடித் தாமரையை நான் பூஜிக்கிறேன்: ஸதாகாலமும் உயர்ந்த ச்ரேஷ்டரான உம்மையே தியானிக்கிறேன். ஸர்வேசுவரராகிய உம்மைச் சரணமாக அடைந்திருக்கிறேன். இவ்வாறுள்ள அடியேன் உம்மிடம் என் வாக்கினால் ஒரு வேண்டுகோளைக் கோருகிறேன். அது யாதெனில், சுககாரணரே, தேவர்களால் எக்காலமும் தங்களுக்கே வேண்டும் என்று பிரார்த்திக்கப்படுவதாயும், கருணை என்பதன் இருப்பிடமாயும், உள்ள தங்கள் நயனங்களிலிருந்து கடைக்கண் பார்வையை எனக்குக் கொடுத்தருள்வீர். அதன்றி, எல்லா உலகங்களிலும் தத்துவத்தை ஜீவன்களுக்கு உபதேசிக்கும் உத்தம குருவே, என்மீது தயவு வைத்து என் மனதிற்கு நிம்மதியான ஸுகத்தை (மோக்ஷத்தை) அளிக்கவல்ல உபதேசத் (பிரம்மோபதேசத்) தைச் செய்தருள்வீர்.

30 "வஸ்த்ரோத்தூதவிதௌ ஸஹஸ்ரகரதா புஷ்பார்ச்சனே
விஷ்ணுதா கந்தே கந்தவஹாத்மதாந்நபசனே பர்ஹிர்முகாத்
யக்ஷதா | பாத்ரேகாஞ்சன கர்ப்பதா ஸ்திமயிசேத் பாலேந்து
சூடாமணே சுச்ரூஷாம் கரவாணி தே பசுபதே, ஸ்வாமிந்,
த்ரிலோகீகுரோ. ||

இளஞ் சந்திரனைத் தலையில் ஆபரணமாகச் சூடியுள்ளவரே, சகல ஜீவன்களாகிய பசுக்களுக்கும் பதியாய் விளக்குபவரே, ஏ, ஸ்வாமிந், பூ:, புவ:, ஸ்வ:, என்ற மூவுலகங்களுக்கும் குருவென வந்து குணம்பல நீக்கி மெய்ஞ்ஞானத்தை தந்தருள்பவரே, என்னால் முழு வன்மையோடு உம்மை பூஜிக்க முடியவில்லையே என்ற வருத்தமே எனக்குள்ளது. ஏனெனில், என் பிரியப்படி உம்மைப் பூஜிக்க வேண்டுமானால், உமக்கு வஸ்திரங்கள் உடுத்தி உபசாரம் செய்வதற்கு ஆயிரக்கணக்கான கைகளையுடைய சூரியன்போல் நானாகவேணும். புஷ்பங்களைக் கொண்டு உம்மை பூஜிக்க 'பங்கயமாயிரம் பூவினில் ஓர் பூக்குறையத் தங்கணிடந்தரன் சேவடிமேற் சாத்திய' சக்கரபாணியான விஷ்ணுபோல் நான் ஆகவேணும். சந்தனங்கொண்டு உம்மை உபசரிப்பதற்கு வாஸனைகளை நன்றாய் அறிந்து அவ்வாஸனையைக் கவர்ந்து வரும் வாயுவின் தன்மையை நான் அடையவேண்டும். அறுசுவைகளுடன் சமைத்த அன்னத்தைக் கொண்டு உம்மை உபசரிக்க தேவேந்திரன் போல் நான்

ஆகவேண்டும். அர்க்கிய பாத்திரம் முதலான உபசாரங்கள் செய்ய எனக்கு பிரும்மாவின் தன்மை உண்டாகவேணும். இத்துணைக் குணங்களையும் பெற்றேனாயின் எனது மனது திருப்தியடையுமாறு உம்மைப் பூஜிக்க வல்லவனாவேன்.

**31.** "நாலம்வா பரமோபகாரகமிதம் த்வேகம் பசுநாம்பதே, பச்யந்
குக்ஷி கதாந், சராசரகணான், பாஹ்யஸ்திதாந் ரக்ஷிதும் |
ஸர்வாமர்த்ய பலாயநௌஷதமதி ஜ்வாலாகரம், பீகரம்
நிக்ஷிப்தம் கரளம் களேநகளிதம் நோத்கீர்ணமேவத்வயா ||"

ஸகல ஜீவர்களுக்கும் பதியே, நினைத்துப் பார்த்தால் உம்மைப் போல பரம உபகாரியாவர் யிருக்க முடியும்? உமது வயிற்றிற்குள் இருக்கப்பட்ட ஜீவராசிகளுள்ள அண்டங்களுக்கு அளவில்லை. வெளியில் உள்ள சராசரக் கூட்டங்களுக்கும் அளவில்லை. இவைகள் அனைத்தையும் ஒருங்கே காத்து வருபவர் நீரன்றோ? தேவாஸுரர்கள் அமிர்தத்தையடைய பாற்கடலைக் கடைந்தபோது அதிகமான ஜ்வாலைகளைக் கக்கியும், பயங்கரத்தை யுண்டுபண்ணியும் வெளிவந்த விஷத்தைப் பார்த்து ஓட்டம் எடுத்த தேவர்களது பயம் என்ற ரோகத்தைத் தீர்ப்பதற்கு அவ்விஷத்தை நீர் பானம் செய்தீர். அம்மட்டோ? உமது வயிற்றிற்குள் அது போகுமாயின் அங்குள்ள கணக்கற்ற ஜீவன்களுக்கு கெடுதல் உண்டாக்கும் என்றதையும் நீர் எண்ணியவராய், விழுங்கப்பட்ட அவ்விஷத்தை வயிற்றிற்குச் செல்லாதபடி உமது கழுத்திலேயே நிறுத்தினீர். உமது பரம உபகாரத்தன்மையையும் ஆற்றலையும் அன்பையும் அறிவதற்கு இந்த ஒரே காரியம் மட்டும் போதுமான சாக்ஷியமாகுமே!

**32.** "ஜ்வாலோக்ரஸ் ஸகலாமராதி பயத: க்ஷ்வேள: கதம்வா த்வயா
த்ருஷ்ட: கிஞ்சகரே த்ருத: கரதலே கிம்பக்வ ஜம்பூ பலம் |
ஜிஹ்வாயாம் நிஹிதச்ச ஸித்த குடிகாவாக் கண்டதேசே ப்ருத:
கிந்தே நீலமணிர் விபூஷணமயம், சம்போ, மஹாத்மன் வத ||."

ஹே, சுபகாரணரே, மஹத்துக்கும் மஹத்தான பெரியோரே, நினைக்க நினைக்க எனக்கு சந்தேகமும் ஆச்சரியமும் உண்டாகிறதே, ஐயா, அக்னிஜ்வாலைகளைக் கக்கியும் கேட்ட மாத்திரத்திலும் பார்த்த மாத்திரத்திலும் தேவர்களுக்குப் பயத்தை விளைவித்த அவ்விஷத்தை எவ்வாறு நோக்கினீர்? பின்னர் அதை எவ்வாறு கையில் எடுத்தீர்?

உமது அழகிய உள்ளங்கையில் வைத்தீரே, அது என்ன நாவற் பழமா? நாவிலும் வைத்தீரே, ஸித்தர்கள் உட்கொள்ளும் குளிகையா? கண்டத்தில் வைத்தருளினீரே, அலங்காரஞ் செய்யும் நீலமணியா? உமது அற்புதக் காரியத்தை எனக்குச் சொல்லுவீரா?

**33.** "நாலம்வா ஸக்ருதேவ தேவ பவதஸ் ஸேவா நதிர்வாநதி:
பூஜாவா ஸ்மரணம் கதா ச்ரவணமப்யா லோகநம் மாத்ருசாம் |
ஸ்வாமிந் நஸ்திரதேவதாநுஸரணு யாஸேந கிம் லப்யதே காவா
முக்திரித: குதோபவதி சேத் கிம் ப்ரார்த்த நீயம் ததா ||"

ஹே, ஸ்வாமிநாதா, தேஜோமயமாய் விளங்குபவரே, உம்மை நமஸ்கரிப்பதாலும், துதிப்பதாலும், பூஜிப்பதாலும், நினைப்பதாலும், உமது கதையைக் கேட்பதாலும், உம்மை ஒருதரம் தரிசிப்பதாலும், அவ்வித ஸேவையானது என்போன்ற எளியோனுக்கு உயர்வான பேரின்பமாம் முக்தியை கொடுக்கக் கூடுமே! இவ்விதங்களில் அடைவதைத் தவிர்த்து வேறு முக்தியென்று அடையக் கூடிய நிலைமையும் ஒருவனுக்கு உண்டோ? இவ்வித உபாயங்களில் எதிலு லாவது முக்தியடையக் கூடியதாயிருக்கும் போது சாசுவதமற்ற இதர தேவதைகளை உபாஸிப்பதில் வீண் பிரயாஸமேயன்றி வேறு லாபம் ஒன்றுமில்லையே. அப்படிக்கிருக்க மற்ற தேவதைகளை ஆச்ரயித்து அடையக் கூடியது என்ன இருக்கிறது? ஒன்று மில்லை.

**34.** "கிம் ப்ரூமஸ்தவ ஸாஹஸம், பசுபதே, கஸ்யாஸ்தி, சம்போ, பவ தயைர்யஞ்சேத்ருசமாத்மநஸ்திதிரியம் சார்யை:க்தம் லப்யதே | ப்ரச்யத்தேவ கணத்ர ஸந்முனிகணம் நச்யத்ப்ர பஞ்சாலயம் பச்யந்நிர்ப்பய ஏக ஏவ விஹரத்யாநந்த ஸாந்த்ரோ பவாந் ||"

ஹே, பசுபதே, உமது ஸாகஸத்தை என்னென்று கூறுவது? உமது தைர்யம் யாவருக்கு உண்டு? உமது பெருமையை யாரால் அடையக் கூடும்? ஆநந்த நிலயமான நீர் தம் தம் ஸ்தானங்களி லிருந்து நழுவும் தேவக் கூட்டங்களையும் பயமுடன் இருக்கின்ற ரிஷிக் கூட்டங்களையும் நசிக்கப்படக் கூடிய பிரபஞ்சங்களையும் மஹாப்பிரளய காலத்தில் துடைத்து, நீர் மட்டும் தன்னந்தனியே யிருந்து சிறிதும் பயமின்றி நடித்து விளையாடுகின்றீரே!

**35.** "யோகக்ஷேமதுரந்தரஸ்ய ஸகலச்ரேய: ப்ரதோத்யோகினோ த்ருஷ்டாத்ருஷ்டமதோபதேசக்ருதினோ பாஹ்யாந்தரவ்யாபின: | ஸர்வக்ஞஸ்ய தயாகரஸ்ய பவத:கிம் வேதி தவ்யம் மயா சம்போ, த்வம் பரமாந்தரங்க இதிமே சித்தேஸ்மராமி அன்வஹம் ||"

ஹே, சம்போ, அடையக் கூடாததை அடைதல், அடைந்ததைக் கைவசம் வைத்துக் காப்பாற்றுதல், இவைகளால் ஏற்படும் சுமைகளை வஹிக்கிரவராயும், சகல நலங்களையும் கொடுப்பதாகவே கங்கணங்கட்டியிருப்பவராயும், இஹத்தில் காணப்பட்டவைகள், பரத்தில் காணப்படாதவைகள் மூலம் சகல இஷ்டங்களையும் பூர்த்தியாய்க் கொடுக்க வல்லவராயும், அகத்திலும் புறத்திலும் வியாபித்திருப்பவராயும், ஸர்வக்ஞராயும், தயைக்கு இருப்பிடமானவராயும், உள்ள உமக்கு என்னால் அறிவித்துக் கொள்ள என்ன இருக்கிறது? நானோ உம்மை எனது உண்மையான ஆப்தர் என்று அனுதினமும் மனதில் நினைக்கிறேன். ஆகையால் நான் என் குறையிரப்பதற்கு சாத்தியனாகாததால் எனக்கு வேண்டியதை நான் வாயாற் கேளாமல் நீரே கொடுத்துக் காப்பாற்றுவீர்.

**36.** "பக்தோ பக்தி குணாவ்ருதே முதம்ருதா பூர்ணே ப்ரஸன்னே மன:கும்பே ஸாம்ப தவாங்க்ரி பல்லவயுகம் ஸம்ஸ்தாப்ய ஸம்வித் பலம் | ஸத்வம் மந்த்ரமுதீரயந்நிஜ சரீராகார சுத்திம் வஹன் புண்யாஹம் ப்ரகடீகரோமி ருசிரம் கல்யாண மாபாதயன் ||"

ஹே, அம்பாள் ஸமேதமூர்த்தியே, நான் ஒரு பக்தன்; எனது சரீரம் பரிசுத்தமடையும் பொருட்டும் சாசுவதமான மங்களம் நிரம்பிய மோக்ஷத்தையடையும் பொருட்டும் ஒரு காரியம் செய்கிறேன். அது புண்யாகவாசனம். பக்தியென்ற நூலைக் கொண்டு சுற்றி, ஸந்தோஷம் என்ற நீரால் நிறைத்து, சுத்தமாய்ப் பிரகாசிக்கும் என்மனமான குடத்தை வைத்து, தேவரீருடைய திருவடிகளாகிற தளிர்களையும் மேலே பரப்பி, ஞானம் என்ற தேங்காயை வைத்து மூடி, ஸத்வகுணமுள்ள பஞ்சாக்ஷரம் என்ற திவ்விய மந்திரத்தை ஜபித்து அக்கர்மத்தைச் செய்கிறேன். தயைகூர்ந்து அதை ஏற்றுக் கொள்ளுவீர்.

**37.** "ஆம் நாயாம் புதி மாதரேண ஸுமனஸ் ஸங்காஸ் ஸமுத்யன்மனோ மந்தானம்த்ருட பக்திரஜ்ஜு ஸஹிதம் க்ருத்வா மதித்வா தத: | ஸோமம் கல்பதரும் ஸுபர்வ ஸுரபிம் சிந்தாமணிம் தீமதாம் நித்யாநந்தஸுதாம் நிரந்தரரமா ஸௌ பாக்ய மாதந்வதே ||"

தேவ, பண்டிதர்களும் தங்கள் தங்கள் காரியங்களால் ஒரே வகையான பலனையடைகிறார்கள். பண்டிதர்கள் முயற்சியுடன் தங்கள் பலமான பக்தி என்ற கயிற்றைக் கொண்டு, தங்கள் மனம் எனும் மத்தை ஏந்தி, வேதங்கள் என்ற சமுத்திரத்தைக் கடைந்து, கற்பகவிருக்ஷம் போன்ற தயாளுவத்தை யுடையவரும், அழகிய காமதேனுவைப் போன்ற தாராளத்துவ முடையவரும், சிந்தாமணி என்பதற்கு சமானமானவரும், நித்தியாநந்தஸுகத்தைக் கொடுப்ப வராயும், சாசுவதமான அழகுடன் அழிவற்ற ஸௌபாக்கியத்தை யளிக்கவல்லவராயும், உள்ள உம்மையே அடைகிறார்கள்.

அதேவிதம் தேவர்கள் கூட்டங்களாகச் சேர்ந்து மனதில் முயற்சி கொண்டு சலியாத வாசுகி என்னும் கயிற்றைக் கொண்டு மந்தரமென்னும் மத்தை நாட்டி க்ஷீராப்தியைக் கடைய அதிலிருந்து சந்திரனையும் கற்பகவிருக்ஷத்தையும் காமதேனுவையும் சிந்தாமணி யையும், எப்போதும் ஸந்தோஷத்தையடையச் செய்யும் அமிருதத் தையும், பூர்ண அழகினையுடைய லக்ஷ்மிதேவியையும் அடைந்து மோக்ஷ லக்ஷ்மியின் ஸமிருத்தியுடைய உம்மையே யடைந்திருக்கிறார் கள்.

**38.** "ப்ராக் புண்யாசலமார்க்க தர்சிதஸுதாமூர்த்தி: ப்ரஸன்னச் சிவ, ஸோமஸ்ஸத்குண ஸேவிதோம்ருகதர: பூர்ணஸ்தமோ மோசக: | சேத: புஷ்கர லக்ஷிதோ பவதி சேதாநந்த பாதோ நிதி: ப்ராகல்ப்யேந விஜ்ரும்பதே ஸுமனஸாம் வ்ருத்திஸ்ததா ஜாயதே |"

முற்பிறப்பில் செய்த மலைபோன்ற புண்ணிய கர்மத்தின் வழியே காணப்படுபவரும், மரணமற்ற சரீரத்தையுடையவரும், ஸ்வப் பிரஸன்னராயிருப்பவரும், ஸுகஸ்வரூபியாயும், சிறந்த குணங்களையுடைய பெரியோர்கள் ஸேவைக்கு பாத்திரராயும், மானைத் தரித்தவராயும், ஸர்வவியாபகராயும், அக்ஞானத்தை போக் கடிப்பவராயும், உள்ள நீர் போத சக்தியில் ஹ்ருதய ஆகாசத்தில் காணப் பெறுவீராயின், அப்போது பிரம்மாநந்தமான சமுத்திரமும்

உயர்ந்து பொங்குகிறது. அப்போது உம்மைச் சிந்திக்கும் பண்டிதர்கள் விருத்தியடைகிறார்கள். அதுபோலவே கிழக்குத் திக்கில் புண்ணிய பர்வதத்தின் இடையே தோன்றி, அமிருதமயமான சரீரத்துடன் கூடிய ஆநந்தகரனை சந்திரன் நக்ஷத்திரங்களாற் சூழப்பெற்று ஷோடசகலா பூர்ணனாகி, இருளை நீங்கி உயர்வை யடைகிறான் (சந்திரனுக்கும் சிவனுக்கும் சிலேடை).

**39.** "தர்மோமே சதுரங்க்ரிகஸ்ஸுசரித: பாபம் விநாசம் கத:
காமக்ரோத மதாதயோ விகளிதா: காலஸ்ஸுகா விஷ்க்ருத: |
ஞானாநந்த மஹௌஷதிஸ் ஸுபலிதா கைவல்யநாதே ஸதா
மாந்யே மாநஸ புண்டரீகநகரே ராஜாவதம்ஸே ஸ்திதே ||"

ஹே, பசுபதி, உம்மை யடைந்ததன் பயனைப் பெற்றேன். பூஜிக்கத் தகுந்த சந்திரசேகரான உம்மை தாமரைப் போன்ற எனது ஹ்ருதயமாகிற பட்டணத்தில் மோக்ஷநாதராய் விளங்குவதைக் கண்டேன். நான்கு கால்கள் கொண்ட தருமத்தை நன்கு செய்யச் சக்தியடைந்தேன். என்னிடமிருந்து வந்த பாபம் நசிக்கப்பட்டு நான் பாபரஹிதனானேன். காமம் க்ரோதம் முதலான பகைவர்கள் என்னைவிட்டு ஓட்டம் பிடித்து விட்டார்கள். எனது காலமும் ஸுகத்திலேயே கழிக்கப்பட்டது. அறிவு, சந்தோஷம் முதலான பெரிய பேறுகள் நன்றாய்க் கிடைத்தன.

**40.** "தீயந்த்ரேண வசோகடேன கவிதாகுல்யோப குல்யாக்ரமை:
ஆநீதைச்ச ஸதாசிவஸ்ய சரிதாம் போராசி திவ்யாம்ருதை: |
ஹ்ருத்கேதாரயுதாச்ச பக்திகலமாஸ்ஸாபல்யமாதன் வதே
துர்ப்பிக்ஷாந்மம ஸேவகஸ்ய பகவன் விச்வேச பீதி: குத: ||"

ஐய, ஷட்குண ஸம்பன்னரே, ஸர்வேச்வரரே, உமது திவ்ய சரித்திரங்களைச் சொல்லி உம்மை ஆராதிப்பதில் அடையக் கூடிய பயனை என்னவென்று அடியேன் எடுத்துரைக்கக் கூடும்? புத்தியாகிற ராட்டினயந்திரத்தால் வார்த்தை என்ற குடத்தை ஏந்தி, கவிகளை கவனம் செய்தலாகிற வாய்க்கால் வழியே ஓடிவரும் பரம மங்களஸ்வரூபியாயுள்ள உமது சரித்திர மென்ற நீரைக் கொண்டு, மனதாகிற வயல்களைப் பயிர் செய்ய, பக்தியென்ற கதிர்கள் உண்டாகுந்தன்மையை செழித்து வளர்ந்துள்ள நன்மையை யாவரும் அடைதல் கூடும். அவ்வாறு என்போல் வார் செய்வார்களாயின்

தூர்ப்பிக்ஷத்திலேயே அடிமையாயிருக்கும் எனக்கு பயம் என்பது சிறிதும் இல்லாததாகும்; க்ஷாமத்துக்கும் எனக்கும் அதிக தூர மாகி விடுமல்லவா ?

41. பாபோத்பாத விமோசனய ருசிரைச்வர்யாய ம்ருத்யஞ் ஜய, ஸ்தோத்ரத்யான நதிப்ரதக்ஷிண ஸபர்யாலோக நாகர் ணனே | ஜிஹ்வாசித்த சிரோங்க்ரி ஹஸ்த நயனச்ரோத்ரை: அஹம் ப்ரார்த்திதோ மாமாக்ஞாபய தன்னிரூபய முஹு॰ர் மாமே வைமாமே வச: || ''

ஹே, ம்ருத்யுவை ஜயித்தவரே, பல ஜன்மங்களில் செய்யப் பட்டுக் குவிந்து கிடக்கும் பாபத்தையும் உபத்திரவங்களையும் நீக்கும் பொருட்டும், உமது திவ்விய ஐச்வரியத்தைப் பெறவும், எனது இந்திரியங்கள் யாவும் உமது கிருபாகடாக்ஷத்தால் என்னைத் தூண்டுகின்றன. எனது நாக்கு, மனம், தலை, கால், கைகள், கண்கள், செவிகள் முதலான சகல அவயவங்களும் என்னை சதா காலமும் உம்மைத் துதிக்கவும், தியானிக்கவும், வணங்கவும் பிரதக்ஷிணம் செய்யவும், பூஜிக்கவும், தரிசிக்கவும், உமது திவ்விய சரித்திரங்களைக் கேட்கவும், பிரார்த்திக்கின்றன. ஆதலால் நீர் அந்தந்த அவயவங்களின் சக்தியை நிரூபித்து உத்திரவிடுவீர். எனக்கு மௌனம் என்பது மட்டும் வேண்டவே வேண்டாம்; மூக பாவத்தை நான் வேண்டிலேன்.

42. "காம்பீர்யம் பரிகாபதம் கனத்ருதி: ப்ராகார உத்யத்குண ஸ்தோமச் சாப்தபலம் கனேந்த்ரிய சயோத்வாராணிதேஹே ஸ்தித: | வித்யா வஸ்து ஸம்ருத்தி ரித்யகில ஸாமக்ரீஸமேதே ஸதா துர்க்காதிப்ரிய தேவ மாமகமனோ துர்க்கே நிவாஸம் குரு || ''

ஹே, துர்க்காதிப்ரிய (அம்பிகையிடத்தில் பிரியமுள்ளவரே), நீர் துர்க்காதிப்ரியரே, வழிகள் கஷ்டமாயுள்ள மலைப்பிரதேசத்தில் வஸிக்க இஷ்டப் பட்டவர் ஆவீர். ஆயினும் தேவதேவரே, என் மனம், என்ற துர்க்கத்தில் தயவு செய்து தங்கியருள்வீர். என் மனமென்ற துர்க்கம் கம்பீரமுள்ளது; அழகும் தைரியமும் கொண்டு மதில்கள் அடங்கிய கோட்டையைக் கொண்டது; ஸாது குணஸமூகமென்ற சேனை கொண்டது; ஆப்த மென்ற பல

மடைந்தது ; அக்கோட்டைக்கு கணக்கற்ற இந்திரியக் கூட்டங்களென்ற வாயில்கள் உண்டு ; சிவவிஷய ஞானவித்தை என்ற பதார்த்தங்கள் வெகு விதமாயுண்டு ; ஆகையால் என்மனமெனும் கோட்டையில் ஸகலஸாமக்ரியைகளும் இருப்பனவாதலால் நீர் வாஸம் செய்ய தகுந்த இடமேயாகும்.

**43.** "மாகச் சஸ்த்வ மிதஸ்ததோ கிரிச மய்யேவ வாஸம் குரு ஸவாமிந், ஆதிகிராத, மாமகமந: காந்தார ஸீமாந்தரே | வர்த்தந்தே பகுசோ ம்ருகாமதஜுஷோ மாத்ஸர்ய மோஹா தய ஸ்தான் ஹத்வா ம்ருகயா விநோத ருசிதாலாபஞ்ச ஸம்ப்ராப்ஸ்யஸி || "

ஹே, ஸ்வாமின்; ஆதிமுதல்வரே, கிராதவடிவங் கொண்டவரே, பர்வதத்தில் சயனிப்பவரே, வேடுவ வுருவந்தாங்கி வேட்டை நிமித்தம் நீர் இங்குமங்கும் அலைதல் வேண்டாம். உமது வேட்டைக்குகந்தவையாவும் என்னிடமேயுள்ளன. என்மனதின் கண் நீர் இருக்கலாம். அங்கே யாவராலும் நுழையக்கூடாத அடர்ந்த காட்டுப் பிரதேசத்தின் நடுவே மதங்கொண்ட பொறாமை ஆசை முதலான மிருகங்கள் கணக்கற்று இருந்து திரிகின்றன. நீர் அவைகள் எல்லாவற்றையும் வேட்டையாடிக் கொல்லலாம். வேடுவ உருவமடைந்ததின் பயனை முற்றிலும் என்மனத்திடத்திலேயே நீர் அடையலாம்.

**44.** "கரலக்ந ம்ருக: கரீந்த்ரபங்கோ கனசார்த்தூல விகண்டநோ ஸ்தஜந்து: | கிரிசோ விசதாக்ருதிச்ச சேத: குஹரே பஞ்சமுகோஸ்தி மே குதோபீ: || "

எனக்கு இப்போது பயம் என்பது கொஞ்சமும் இல்லை ; ஏனெனின் கையில் மானைத் தரித்தவரும், கஜாசுரனைக் கொன்றவரும், வியாக்கிராசுரனை நசித்தவரும், தமது ஸ்வரூபத்தில் சகல ஜந்துக்களும் லீன மாகும்படி விளங்கி நிற்பவரும், மலையின் மீது சயனித்திருப்பவரும், சுத்த நித்த வஸ்துவானவருமான, ஐம்முகங்கள் கொண்ட பரமசிவன் என்ற சிங்கம் எனது மனதாகிற குகையில் தங்கியிருக்கிறது. ஆதலின் எனக்கு பயம் என்பது எவ்வாறு உண்டாகும் ?

45. "சந்தச் சாகிகாங்விதைர் த்வி ஜவரைஸ் ஸம்ஸேவிதே சாச்வதே ஸௌக்யாபாதினி கேதபேதிநி ஸுதாஸாரை: பலைர் தீபிதே | சேத: பக்ஷி சிகாமணே த்யஜ வ்ருதா ஸஞ்சார மன்யை ரலம் நித்யம் சங்கரபாத பத்ம யுகளீ நீடே விஹாரம் குரு ||"

ஹே, மனமாகிற சிறந்த பக்ஷியே! உனக்கு உயர்ந்த புத்தி மதி கூறுவேன். உன் நன்மையைக் கருதிக் கேட்டு நடப்பாய். வீணுக அலைந்து திரியும் வாழ்க்கையை ஒழிப்பாய். இது சுகத்தை யளிக்கும் இது சுகத்தை யளிக்கும் என்று எண்ணி எண்ணி திரிந்து திரிந்து பல பல தேவதைகளை தேடித் தேடிக் கஷ்டப்பட்டது போதும். இனியாவது வேதங்களாகிற மரங்களின் கிளைகளான உபநிஷத்துக்களுடன் கூடிய பிராமணுேத்தமர்களால் ஆச்ரயிக்கப் பட்டும், சாசுவதமானதும், பரமஸௌக்கியத்தை யளிக்கக் கூடியதும், சஞ்சலம் சிரமம் முதலான நிலைகளை யொழிக்கவல்லதும், அம்ருதப்பிரவாகத்துக்கு ஒப்பாக விருப்பதுமான தர்மம் முதலான (அம்மரங்களில் பழுக்கும்) பழங்களால் விளங்குவதாயுள்ள ஸ்ரீ சங்கரபாத பத்மங்களான கூட்டிலே அடைந்து தங்கி எப்போதும் விளையாட்டுடன் காலத்தைக் கழிப்பாய். அவ்வாறு செய்வாயானல் அப்பழங்கள் உனது ஸம்ஸார துக்கம் என்ற பசியை தீர்த்து மறுபடியும் உண்டாகாதபடி செய்யும்.

46. ஆகீர்ணே நகராஜி காந்தி விப வைருத்யங் ஸுதா வைபவை: ரா தௌதே பிச பத்மராக லலிதே ஹம்ஸ வ்ரஜைராச்ரிதே | நித்யம் பக்தி வதூகணைச் சரஹஸி ஸ்வேச்சாவி விஹாரம் குரு ஸ்தித் மானஸ ராஜ ஹம்ஸ கிரிஜா நாதாம் க்ரி ஸௌதாந்தரே ||"

ஹே, மனமெனும் ராஜஹம்ஸமே! உனக்கோர் உபாயம் கூறுவேன் கேட்பாயாக, நகங்களினின்று வெளிப்படும் காந்தி எங்கும் வியாபிக்கும்படி விளங்கியும், வளர்பிறையின் கிரணங்களாகிய சுண்ணும்பு எங்கும் பூசப்பட்டது போலுள்ள, பிரகாசத்தோடு இருந்தும், இன்னும் பத்மராகம் முதலான உயர்ந்த ரத்தினங்களால் அழகுடன் இழைக்கப்பட்டதாயும், மந்த்ரார்த்தத்யானபரரான ஹம்ஸர் (யதிகள்) களால் எப்போதும் சூழ்ந்து ஸேவிக்கப்பட்டது மான இருப்பிடத்தை யுடைய நமது பர்வத வர்த்தனியான

ஸ்ரீ மாதாவின் நாதனுன ஈசுவரருடைய திருவடிகளின் நடுவில் நீ எப்போதும் ரஹஸ்யமாய் இரு. அங்கு பக்தி ஸமூகம் என்ற ஸ்திரீகளும் இருப்பார்கள். அவர்களுடன் நீ இருந்து உன் இஷ்டப்படி காலத்தைக் கழிப்பாய்.

**47.** "சம்புத்யான வஸந்தஸங்கினி ஹ்ருதாராமே கஜீர்ணச்சதா: ஸ்ரஸ்தா பக்தி லதாச்சடா விலஸிதா: புண்ய ப்ரவாளச்ரிதா: | தீப்யந்தே குணகோரகா ஜபவச: புஷ்பாணி ஸத்வாஸநா: ஞானாநந்த ஸுதாமரந்தலஹரீ ஸம்வித் பலாப்யுந்நதி: ||"

ஆ, உம்மை தியானிப்பதின் மகத்துவத்தையும் ஆநந்தத்தையும் என்னென்று கூறுவது! உமது தியானம் வஸந்தருது போன்ற சந்தோஷகரமானது; என்மனமே பூங்காவனம்; பாபங்கள் அனைத்தும் பழுத்து உதிர்ந்து போகும் சருகுகள்; நற்செய்கைகள் என்ற தளிர்கள் நிரம்பியுள்ளது; உம்மை ஸேவிக்கும் பக்தர்கள் கொடிகள் போன்றுள்ளார்; ஸத்வாதிகுணங்களான மொட்டுக்கள் காணப்படுகின்றன; ஜபங்களும் போற்றுதலான மொழிகளும் புஷ்பங்களாக இருக்கின்றன; அவைகளுக்கு சற்கர்மங்கள் நல்ல வாசனையைக் கொடுக்கின்றன; ஞானநந்தம் என்ற கனிவர்க்கங்கள் பிரகாசிக்கின்றன. இதை விட வேறு பயன் கோருவது யாது?

**48.** "நித்யாநந்தரஸாலயம் ஸுரமுனி ஸ்வாந்தாம் புஜாதாச்ரயம் ஸ்வச்சம் ஸத்விஜ ஸேவிதம் கலுஷஹ்ருத்ஸத்வாஸநா விஷ்க்ருதம் | சம்புத்யான ஸரோவரம் வ்ரஜ மனோ ஹம்ஸாவதம்ஸஸ்திரம் கிம் க்ஷுத்ராச்ரய பல்வல ப்ரமண ஸம்ஜாதச்ரமம் ப்ராப்ஸ்யஸி ||"

ஓ, மனமென்ற ஹம்ஸமே, ஒரு விஷயம் உனக்குங் கூறுவேன், உன் நன்மையை நாடிக் கேட்பாயாக. உனக்கு தாரதம்யம் என்ற பகுத்தறிவில்லையே, அற்பர்களை ஆச்சரியிப்பதான சேற்றுக் குட்டையில் கிடந்து உழன்று சிரமப்படுகிறாயே, அந்தோ, உன் ஆயாசத்தை விடுவாய். நான் உனக்கு உற்றதோர் பூம் பொய்கையை எடுத்துக் காட்டுகிறேன்; அதையே நீ யடைவாய். அப்பொய்கையில் சாச்வதமான பிரம்மானந்த மென்னும் ஜலம் நிரம்பியுள்ளது; அவ்விடம் புஷ்பங்களுக்குக் குறைவில்லை; தேவர்கள் முனிவர்கள் முதலான பெரியார்களது மனம் என்ற அம்புஜங்கள் தெளிந்து விகஸித்துள்ளன; அங்கு ஸத்குணங்கள் நிறைந்த த்விஜர்கள்

என்ற பக்ஷிகள் ஸேவையை எண்ணி பறந்து கொண்டிருக்கும்; அப்பொய்கையின் ஜலம் பாபங்கள் என்ற மாசுகளை முற்றிலும் நீக்கி சுத்தப்படுத்தும்; நல்ல வாஸனையுடன் விளங்கும்; சாசுவதமாயுமிருக்கும், அத்தகைய பூம் பொய்கை எது வென்று உனக்கு தெரியவில்லையா! அதுவே பரமசிவனை தியானித்தல் என்ற பூம் பொய்கையாகும்.

**49.** ஆநந்தாம்ருத பூரிதா ஹரபாதாம் போஜால வாலோத்யதா ஸ்தைர் யோபக்னம் உபேத்ய பக்திலதிகா சாகோப சாகான்விதா | உச்சைர்மா நஸ காயமாந படலீமாக்ரம்ய நிஷ்கல்மஷா நித்யாபீஷ்ட பலப்ரதா பவதுமே ஸத்கர்மஸம் வர்த்திதா || ”

ஹே, பகவான், யான் யாசிப்பது ஒன்று உண்டு, கிருபை வைத்து அருள்வீர். எனது ஸேவையான கொடி நன்கு விளங்கி நித்யமாயுள்ள பிரயோஜனமென்ற பழங்களை கொடுக்க வேண்டும். ஏனெனில் அக்கொடியானது ஆனந்த அம்ருதமென்ற நீரால் பாய்ச்சப்படுகிறது; தங்களது திருவடித்தாமரைகளாகிற பாத்தியிலிருந்து முளைத்துள்ளது; படருவதற்கு சாதனமாக ஸ்திரம் என்ற கோலைப் பிடித்துக் கொண்டுள்ளது; கிளை, கப்புகள் உண்டாகி அவைகளிலிருந்தும் சிறுகிளைகள் கவடுகள் உள்ளது; அக்கொடிகள் உயர்வான மனமென்ற பந்தலில் ஆக்ரமித்து படர்ந்துள்ளது; பூச்சி யரித்தல் முதலான தோஷங்களே அண்டாத இலைகளுள்ளது; புராகிருத ஸத்கர்ம விசேஷ புண்ணிய பலத்தால் வளர்க்கப்பட்டதன்றோ அப்பக்தி என்ற கொடி? ஆகையால் எனது பக்திக்கு பலனுண்டாகச் செய்தருள்வீர்.

**50.** “ஸந்த்யாராம்ப விஜ்ரும்பிதம் ச்ருதிசிரஸ்தானாந்தராதிஷ்டிதம் ஸப்ரேம ப்ரம ராபிராம் அஸக்ருத் ஸத்வாஸநாசோபிதம் | போகீந்த்ராபரணம் ஸமஸ்தஸுமன: பூஜ்யம் குணாவிஷ்க்ருதம் ஸேவே ஸ்ரீகிரி மல்லிகார்ஜுந மஹாலிங்கம் சிவாலிங்கிதம் || ”

ஹே, நாதரே, ஸந்தியா காலமாரம்பமாகும் போது (ப்ரதோஷ காலத்தில்) பக்தானுக்ரகம் பொருட்டு தாண்டவ நடனம் செய்து விளங்குபவரும், வேதசிரஸெனும் உபநிஷத வாக்கியங்களின் முடியில் ஆரோபிக்கப்பட்டவரும், உயர்ந்த பிரியத்துடன் கூடின பரமாம்பிகையின் சேர்க்கையால் அழகடைந்தவரும், எக்காலமும் ஸாதுக்களது மனதின் கண்ணே விளங்கிவருபவரும், நாகாபரணராய்

விளங்குபவரும், ஸமஸ்த முனிவர்களாலும் பெரியோர்களாலும் பூஜிக்கப்பட்டவரும், ஸத்வகுணத்துக்கே தமது பிரகாசத்தைக் கொடுத்து விளங்கவைப்பவரும், சிவை என்ற நமது அம்பாளால் ஆலிங்கனம் செய்யப்பட்டவரும் ஸ்ரீபர்வதத்தின் மீது மல்லிகார்ஜுனமென்று பெயர் பெற்றவருமான மகாலிங்கத்தை நான் ஸேவிக்கிறேன். (இப்பாட்டு, ஸ்ரீபகவானை ஒரு மல்லிகைக் கொடிக்கு உவமித்ததாக அர்த்தம் கூறுதலும் கூடும்).

**51.** "ப்ருங்கீச்சா நடனோத்கட: கரிமதக்ராஹீ ஸ்புரந்மாதவா
ஹ்லாத: நாதயுதோ மஹாஸிதவபு: பஞ்சேஷுணாசா த்ருத: |
ஸத்பக்ஷஸ் ஸுமனோவனேஷு ஸ புனஸ் ஸாக்ஷான் மதீயமனோ
ராஜீவே ப்ரமராதிபோ விஹரதாம் ஸ்ரீசைல வாஸீவிபு: ||"

ஐயா, பிருங்கிரிஷியினுடைய வேண்டுகோளுக்கிணங்கி நடனத்தை ஆசையுடன் செய்கிறவராயும், கஜாஸுரனுடைய கொழுப்பை அடக்கினவராயும், மகாதேஜஸ்வியான விஷ்ணுவிடத்தில் வெகுப்ரீதியுடையவராயும், நாததத்துவத்தோடு கூடியவராயும், பரிசுத்தமான வெண்மை நிறமுள்ள தேகத்தையுடையவராயும், மன்மதனது பயத்தால் ஆதரிக்கப்பட்டவராயும், நற்குணமுள்ள முனிவர்களையும் தேவர்களையும் காப்பாற்றுவதில் வெகு சிரத்தையுடையவராயும், கண்ணுக்கெதிரே விளங்கும் ஸ்ரீசைலபர்வதத்தில் வசிக்கிறவராயும், எங்கும் வியாபித்து வருபவராயுமுள்ள ஸ்ரீபிரமராம்பிகையின் பதியான தேவரீர் எனது ஹிருதயதாமரையில் எப்போதும் லீலை செய்யவேணுமென்று பிரார்த்திக்கிறேன்.

(பெண்வண்டுகளின் ஆசையை அனுசரிக்க இஷ்டப்பட்டு யானையின் மத நீரை கிரகிக்கிறதாய், வஸந்தருதுவினிடம் இருந்து சதா சந்தோஷமடைந்து ரீங்கார சப்தத்தோடு கூடிய கறுத்த திருமேனியுடைய மன்மதனால் அங்கீகரிக்கப்பட்ட புஷ்பங்களடர்ந்த காடுகளில் நல்ல இறகுகளுடன் பர்வதங்கள்மேல் ஸஞ்சரிக்குவர சக்திபெற்ற சிவன் என்ற வண்டு எக்காலமும் என் மனமென்னும் தாமரைப்பூவில் விளையாடவேண்டுமென்பதே என் பிரார்த்தனை.)

**52.** "காருண்யாம்ருத வர்ஷிணம் கனவிபத்க்ரீஷ்மச்சிதா கர்மடம்
வித்யாஸஸ்ய பலோதயாய ஸுமனஸ்ஸம்ஸேவ்ய மிச்சாக்ருதிம் | ந்ருத்யத் பக்தமயூர மத்ரிநிலயம் சஞ்சஜ் ஜடாமண்டலம்
சம்போ வாஞ்சதி நீலகந்தர ஸதாத்வாம்மே மனச்சாதக: ||"

ஹே, சம்போ, நீலகண்டரே, என்மனமெனும் சாதகபக்ஷி ஒரு விண்ணப்பம் வேண்டுகிறது. கருணை எனும் அமிர்தத்தைப் பொழிந்து, மகத்தான தாபத்தை நீக்கி, வித்தை என்ற பயிர் விளையும் பொருட்டு, தேவர்களாலும், பெரிய தவத்தோர்களாலும் ஸேவிக்கப்பட்டு, இச்சாமாத்திரத்தில் வேண்டிய விதமான ஸ்வரூபத்தையுடையவராய், நாட்டியஞ் செய்யும் பக்தர்களான மயில்கள் சூழப்பட்டவராய், ஸ்ரீகைலாஸ பர்வதத்தில் எழுந்தருளி அசைந்தாடுகின்ற ஜடாமண்டலத்தையுடையவரான கருணையெனும் பிரவாகத்தை பொழியும் மேகத்துக்கு சமானமாயுமுள்ள உம்மை அடையவேண்டுகிறது.

**53.** "ஆகாசேன சிகீஸமஸ்த பணிநாம் நேத்ராகலாபீநதா அனுக்ராஹீ ப்ரணவோபதேச நினதை: கேகீதியோகீயதே | ச்யாமம் சைல ஸமுத்பவாம் கனருசிம் த்ருஷ்ட்வா நடந்தம் முதா வேதாந்தோபவனே விஹார ரஸிகா: தம் நீலகண்டம் பஜே ||"

ஹே, பகவன், ஆகாயமென்னும் சிகையையுடையவராய், எல்லாநாகங்களுக்கும் தலைவனான ஆதிசேஷனை ஆபரணமாய்த் தரித்தவராய், தம்மை அண்டினவர்களுக்கு அனுக்கிரகம் செய்யும் ஸ்வபாவத்தையுடையவராய், ஓங்காரத்துக்கு உட்பொருளாய், கருநிறம் பொருந்திய பர்வத வர்த்தனியைக் கண்டு நர்த்தனம் செய்பவராய், வேதாந்தமென்ற உபநிஷத்துக்களான வனத்தில் விளையாட இஷ்டமுள்ளவராய், உள்ள நீலகண்டரான உம்மையே ஸேவிக்கிறேன்.

(பரமசிவன் என்ற மயில் ஆகாயத்தில் கொண்டையுடன் சர்ப்பராஜனை ஆதிசேஷன் கண்டதும் சப்தத்தைச் செய்து பயத்தையுண்டுபண்ணியும், சிறந்தகானத்தை மலையின்மீது வெளியிட்டு அங்குள்ள மேககாந்தியைப் பார்த்து ஸந்தோஷங்கொண்டு உத்யானங்களில் விளையாடிக் கொண்டிருக்கிறது. அத்தகைய மயிலான பரமசிவத்தை நான் ஸேவை செய்கிறேன்.)

**54.** "ஸந்த்யாகர்மதி நாத்யப: ஹரிகராகாத ப்ரபூதா நகத்வாந: வாரிதகர்ஜிதம் திவிஷதாம் த்ருஷ்டிச் சடா சஞ்சலம் | பக்தானாம் பரிதோஷ பாஷ்ப விததிர்வ்ருஷ்டிர் மயூரீ சிவாயஸ்மின் உஜ்வல தாண்டவம் விஜயதே தம் நீலகண்டம்பஜே ||"

சாயங்காலமே! உஷ்ணமான பகலின் அந்தியமோ, விஷ்ணு தம் கைகளினால் மிருதங்கவாத்யத்தைக் கொட்டும் நாதமோ, ஸப்த மேகங்களது சப்தமோ, தேவர்களுடைய நேத்திரங்களது ஸமூகமோ, அம்மேகங்களிலிருந்து உண்டாகும் மின்னலோ, பக்தர்களது ஆநந்தபாஷ்பவெள்ளமோ, மழையோ, மங்களத்தை உண்டு செய்யும் மயிற்பேடோ, இவைகளைக் கண்டு சந்தோஷித்து உயர்ந்தநர்த்தனம் செய்யும் மயிலான பரமசிவனை நான் ஸேவிக்கிறேன்.

(ஐய, உம்மையே நான் ஸேவிக்கிறேன், பரதோஷகாலமான ஸந்த்யாகாலத்தில், கோடைகாலத்தின் முடிவிலும் வருஷாகால ஆரம்பத்திலும், விஷ்ணு அடிக்கும் மிருதங்கத்தின் நாதத்துக்குத் தக்கபடி, இடியென்று சொல்லைக் கூடிய சப்தத்துடன், தேவர்கள் ஸதா இமைகொட்டாது பார்க்கும் பார்வைக்கு மின்னல் போல் தோன்றி, பக்தர்களின் மனதை ஆநந்தத்தில் ஆழ்த்தும் வெள்ளப் பெருக்கான பார்வதிதேவியை வாமபாகத்திற் கொண்டு நர்த்தனம் செய்கிற உயர்ந்த பரம்பொருளான உம்மையே நான் ஸேவிக்கிறேன்.)

**55.** "ஆத்யாயாமித தேஜஸேச்ருதி பதைர்வேத்யாய ஸாத்யாய
வித்யாநந்த மயாத்மனே த்ரிஜகத: ஸம்ரக்ஷணோத்யோகினே |
த்யேயாயாகில யோகிபி: ஸுரகணை: கேயாய மாயாவினே
ஸம்யக் தாண்டவ ஸம்ப்ரமாய ஜடினே ஸேயம் நதச்
சம்பவே ||"

ஆதிக்கும் ஆதியாயும், அளவிட்டுச் சொல்ல வொண்ணா சோதியாயும், வேதவாக்கியங்களால் மட்டும் அறியப்படுவராயும், பக்தர்களுக்கு அனுக்ரகம் செய்வதற்காக (அர்ச்சாரூபமாய்) பிரதிஷ்டிக்கப்படுபவராயும், சச்சிதாநந்தஸ்வரூபியாயும், த்ரிலோகங்களையும் காத்தற்தே கங்கணங்கட்டியுயுள்ளவராயும், அகில யோகீஸ்வரர்களால் த்யானம் செய்யப்பட்டவராயும், தேவர் கூட்டங்களால் ஸதாகானத்துடன் போற்றப்பட்டவராயும், தனக்கு மட்டும் ஸ்வாதீனப்பட்டுள்ள மாயா சக்தியுடன் கூடியவராயும், பரதோஷ காலத்தில் தாண்டவமாடப் பிரியப்பட்டவராயும், ஜடாதாரியாயும், சுபமங்களகரராயும் இருக்கும் உம்மையே நான் ஸேவிக்கிறேன்.

56. "நித்யாய த்ரிகுணாத்மனே புரஜிதே காத்யாயனீச்ரேயஸே
ஸத்யாயாதி குடும்பினே முனிமன: ப்ரத்யக்ஷசின் மூர்த்தயே |
மாயா ஸ்ருஷ்ட ஜகத்ரயாய ஸகலாம் நாயாந்த ஸஞ்சாரிணே
ஸாயந்தாண்டவ ஸம்ப்ரமாய ஜடினே ஸேயாந்நதிச் சம்பவே || "

ஹே, பகவன், நித்தியமாயுள்ளவராயும், ஸத்துவ, ரஜ தமோ குணஸ்வரூபியாயும், ஸ்தூல ஸூக்ஷ்ம காரண சரீரங்களான திரிபுரர்களையும் வென்றவராயும், பார்வதி தேவிக்கு மங்களகரராயும், தவத்தின் பலத்தையளிக்க வல்லவராயும், ஸத்யஸ்வரூபராயும், பக்தர்களை உஜ்ஜீவிக்கும் பொருட்டு ஆதியில் குடும்பியாயும், முனிவர்களது மனதில் பிரத்தியக்ஷமாய் புலப்படும் சின்மயாநந்தஸ்வரூபியாயும், மாயையால் சிருஷ்டிக்கப்பட்ட மூவுலகங்களையுமுடையவராயும், ஸகலவேதாந்தத்துறைகளிலே ஸஞ்சரிப்பவராயும், ஜடைகளையுடையவராயும் உள்ள பரமேச்வரராகிய உம்மையே நமஸ்கரிக்கிறேன்.

57. "நித்யம் ஸ்வோதர போஷணாய ஸகலாந் உத்திச்ய வித்தாசயா
வ்யர்த்தம் பர்யடனம் கரோமி பவத: ஸேவாம் நஜானே விபோ |
மஜ்ஜந்மாந்தர புண்ய பாகபலதஸ்த்வம் சர்வஸர்வாந்தரஸ்
திஷ்டஸ்யேவ ஹிதேநவா பசுபதே தோக்ஷகணீ யோஸ்ம்
யஹம் || "

ஹே, எங்கும் நிறைந்துள்ளவரே, ஜீவன்களான பசுக்களுக்கெல்லாம் பதியாக விளங்குபவரே, பக்தர்களுடைய பாபத்தையெல்லாம் நசிப்பவரே, எனது நிலைமையைப் பார்த்தருள்வீராக, தினந்தோறும் என் வயிற்றை போஷிக்கும் பொருட்டும், தனத்தை சம்பாதிக்க வேணுமென்ற ஆசையாலும், நல்லவர் கெட்டவர் என்ற பகுத்தறிவில்லாமல் எல்லோரையும் உத்தேசித்து வீணாக அலைந்து வருகிறேனே! பரமபூஜ்யரான உம்மைத் தகுந்தபடி ஸேவிக்கமட்டும் அறிகிறேனில்லை. ஆயினும் நீர் ஸர்வாந்தரரூபியாய் எல்லாப் பொருள்களுக்குள்ளுமிருந்து அவைகளை இயற்றிவருபவராதலால், நான் இந்த ஜன்மத்தில் யாதொரு புண்ணிகர்மமும் செய்யாதவனை போதிலும், இதற்கு முன்னுள்ள ஜன்மங்களிற் செய்து இருக்கக்கூடிய புண்ணிய பரிபக்குவபலத்தினால், தங்களால் காப்பாற்றப் படுவதற்கு தகுதியுள்ளவனாகிறேனல்லவா?

58. "ஏகோ வாரிஜ பாந்தவ: க்ஷிதிநபோ வ்யாப்தந்தபோ மண்டலம்
பித்வாலோசன கோசரோபி பவதி த்வம் கோடிஸூர்யப்ரப: |
வேத்ய: கின்னபவஸ்ய ஹோ கநதரம் கீத்ருக்பவேந்மத்தமஸ்
தத்ஸர்வம் வ்யபநீயமே பசுபதே ஸாக்ஷாத் ப்ரஸன்னோபவ || "

ஹே, பசுபதே, சூரியன் என்ற ஒருவனே ஸமஸ்த ஜனங்களின் கண்களாற் பார்க்கப்படுபவனாயும் இருந்து, ஆகாயம் பூமி முதலானவைகளை மூடிக் கொண்டிருக்கும் இருளைப் போக்கடித்து பிரத்யக்ஷமாக ஒளியோடு இருக்கிறான். நீரோ கோடி ஸூர்யர்களின் பிரகாசத்தைக் கொண்டவர். ஆயினும் உம்மை என்னால் அறிய முடியவில்லையே! இதை நினைக்க நினைக்க ஆச்சரியம் உண்டாகிறது. என் மனத்திலுள்ள அஞ்ஞானமென்ற இருளை முற்றும் ஒழித்து நீர் பிரத்தியக்ஷமாய் நான் பார்க்கும்படி பிரஸன்னமாவது உமக்கு முடியாதகாரியமா? ஆதலால் கனமான என்மனதில் தேவரீர் தங்கவேண்டுகிறேன்.

59. "ஹம்ஸ: பத்மவனம் ஸமிச்சதி யதா நீலாம் புதஞ்சாதக:
கோக: கோகநதப்ரியம் ப்ரதிதினம் சந்த்ரம் சகோரஸ்ததா |
சேதோவாஞ்சதி மாமகம் பசுபதே கிந்மார்க்கம்ருக்யம் விபோ
கௌரீநாத பவத்பதாப்ஜயுகளம் கைவல்ய ஸௌக்யப்ரதம் || "

ஹே, பசுபதே, ஸர்வவியாபீ, பார்வதி நாதரே, அன்னபக்ஷி தாமரைப் பூக்கள் நிறைந்த ஓடையை விரும்புவது போலும், சாதக பக்ஷி மழையுள்ளமேகத்தை விரும்புவது போலும், சக்ரவாகபக்ஷி சூரியனை விரும்புவதுபோலும், சகோரபக்ஷி சந்திரனை விரும்புவது போலும், என்மனம் உபநிடதங்களால் தேடியடையக் கூடியதும் கைவல்லியம் என்ற பரமஸுகத்தைக் கொடுக்கக்கூடியதுமான உமது திருவடித்தாமரைகளை விரும்புகிறது.

60. "ரோதஸ்தோய ஹ்ருத சரமேணபதிகச் சாயாம் தரோர்
வ்ருஷ்டித: பீதஸ்ஸ்வஸ்தக்ரஹம் க்ரஹஸ்த மதிதிர்த்தீன:
ப்ரபும்தார்மிகம் | தீபம் ஸந்தமஸாகுலச்சசிகினம் சீதாவ்ருதஸ்
த்வந்ததா சேதஸ்ஸர்வ பயாபஹம் வ்ரஜஸுகம் சம்போ:
பதாம் போருஹம் || "

ஏ, மனமே, ஜலத்தின் வேகத்தால் இழுக்கப்பட்டவன் தான் தப்பித்துக்கொள்ள நதிக்கரையடைவானன்றோ? தூரமாக வழி

நடப்பவன் தனக்கு வெப்ப சாந்தியடைய மரத்தின் நிழலையடைவனன்றோ? மழையின் பிரவாகத்தில் நனைந்து துன்பப்படுபவன் ஒரு சுகமான வீட்டையடைவனன்றோ? ஊருக்குப் புதிதாய் வந்தவன் அவ்வூரில் அதிதியை ஏற்க எண்ணங்கொண்ட ஒரு கிரஹஸ்தனை நாடுவனன்றோ? தரித்திரம் என்ற நிலைமையால் வருத்தப்படுபவன் உதாரகுணமும் ஈகைக்குணமுமுள்ள வள்ளலைத் தேடுவானென்றோ? இருட்டில் இருந்து தத்தளிப்பவன் அதை நீக்குவதற்கு விளக்கை அடைவானன்றோ? குளிராலும் பனியாலும் நடுக்கங்கொண்டு துன்பப்படுவன் அக்கினியை யடைவானன்றோ? இவ்வாறு அறிந்தும் நீயும் சகலவிதமான பயத்தையும்போக்கடித்து பரமஸுகத்தை யளிக்கவல்ல பரமசிவனது திருவடித் தாமரையைத் தேடி அடைய வேணுமல்லவா?

**61.** "அங்கோலம் நிஜபீஜ ஸந்ததிரயஸ்காந்தோபலம் ஸூசிகா
ஸாத்வீநைஜ விபும் லதா க்ஷிதிருஹம் ஸிந்துஸ் ஸரித்வல்லபம் |
ப்ராப்னோதீஹ யதா ததா பசுபதே: பாதாரவிந்தத்வயம்
சேதோவ்ருத்திருபேத்ய திஷ்டதி ஸதா ஸாபக்திரித்யுச்யதே ||"

மனமே, பக்தியின் தன்மையை உனக்கு விளக்கவேண்டுமோ? இவ்வுலகத்தில் அங்கோல மரத்தின் விதைகள் (இரவில் கீழே விழுந்துவிட்டு காலை சூரியோதயத்துக்குள்) மரத்தில் தானே கிளம்பி ஒட்டிக்கொள்ளுதல் போலும், இரும்பினலாய ஊசி காந்தக் கல்லைக் கண்ட மாத்திரத்தில் தானே நகர்ந்து ஒட்டிக் கொள்வதுபோலவும், உயர்ந்த பதிவிரதா சிரோன்மணி தனது புருஷனை கதி என்று அவனைச் சேர்ந்து அணைந்திருப்பது போலும், சிறிய கொடி அதன் பக்கத்திலுள்ள விருக்ஷத்தைப்பற்றி வளர்ந்தோங்குவது போலும், மலையினுச்சியில் உற்பத்தியாகி பலநாடுகளிலும் ஓடி செழிப்பு செய்யும் நதி முடிவில் சமுத்திரத்தைக் கண்டு அதை யடைதல் போலும், மனமென்ற சித்தவிருத்தி 'பசுபதியின் திருவடித்தாமரையிரண்டையும் அடைந்து ஸதா அங்கே நிலைத்திருந்தால் அதுவே பக்தியென்று சொல்லப்படும்.

**62.** ஆநந்தாச்ருபிராத நோதி புலகம் நைர்மல்யதச்சாதனம் வாசா
சங்கமுகேஸ்தி தைச்சஜடரோ பூர்த்திஞ்சரித்ராம்ருதை: |
ருத்ராக்ஷைர் பஸிதேந தேவவபுஷோ ரக்ஷாம்பவத் பாவநா
பர்யங்கே விநிவேச்ய பக்திஜனனீ பக்தார்பகம் ரக்ஷதி ||"

ஹே, தேவேச, நான் பக்தன் என்ற குழந்தை; பக்தி என்பதே எனது தாயாகும். ஏனெனில் பக்தியென்னும் அன்னை, உம்மைத் தியானித்தல் என்ற கட்டிலில் படுக்கவைத்து, ஆநந்தக் கண்ணீர் கொண்டு புளகாங்கிதமாகுமாறு குளிப்பாட்டி, நிர்மலமென்ற வஸ்திரத்தால் என்னை போத்தி, வேதவாக்கென்னும் சங்கு கொண்டு உமது திவ்ய சரிதமென்ற பாலால் என்வயிற்றை நிறைத்து, ருத்திராக்ஷம், விபூதி ஆகிய சிவசின்னங்கள் கொண்டு என் சரீரத்திற்கு இரக்ஷை செய்து, என்னை சதா காப்பாற்றக் கூடும்.

**63.** "மார்க்காவர்த்தித பாதுகா பசுபதேரங்கஸ்ய கூர்ச்சாயதே
கண்டூஷாம்பு நிஷேசனம் புராரிபோ: திவ்யாபிஷேகாயதே |
கிஞ்சித் பக்ஷித மாம்ஸ சேஷகபளம் நவ்யோபஹாராயதே
பக்தி:கிம் நகரோத்யஹோ வனசரோ பக்தாவதம் ஸாயதே ||"

ஹே பகவானே, பக்தியென்ற விஷயத்தின் மஹிமையை என்னவென்று கூறுவது? பக்தி என்பது உம்மைக் கூட எவ்வாறு செய்கிறதென்று யோஜித்தால் அதன் பெருமை நன்குயறியலாமன்றோ? வேடுவனொருவன் (திண்ணன் என்ற கண்ணப்பன்) காட்டுப் பாதைகளில் சென்று நடந்து தேய்ந்த தன் செருப்பை உமது புருவ மத்தியில் சேர்த்ததும், தன் வாயில் நிறைய வைத்து திருபுராந்தகரான உமது மீது உமிழ்ந்து அதை நீர் தேவர்களுக்குரிய அபிஷேக ஜலமென்று கொள்ளச் செய்ததும், கொஞ்சம் கொஞ்சமாய் கடித்து மென்று ருசியானதென்று உமக்கு அவ்வெச்சில் மாம்ஸத்தை நீர் புதிதாகத் தயாரிக்கப்பட்ட நைவேத்தியம் என்று அங்கீகரிக்கச் செய்ததும், இவ்விதம் செருப்பைக் கொண்டு உமது திருமேனியைத் தீண்டியும் எச்சில் நீரை உமிழ்ந்தும் மாம்ஸத்தை வாயிற் போட்டும் உள்ள அவ்வேடனை சிறந்த பக்தனாகச் செய்தது யாது? உம்மிடம் அவனுக்கு இருந்த பக்தியென்பதல்லவா? ஆகையால் பக்தியென்ற பொருள் எதைத்தான் செய்யாது?

**64.** "வக்ஷஸ்தாடநம் அந்தகஸ்ய கடிநா பஸ்மார ஸம்மர்த்தனம்
பூப்ருத்பர்யடனம் நமத்ஸுரசிர: கோடீரஸங்கர்ஷணம் |
கர்மேதம் ம்ருதுளஸ்ய தாவக பதம் த்வம் த்வஸ்ய கௌரீபதே
மச்சேதோமணி பாதுகா விஹரணம் சம்போ ஸதாங்கீகுரு ||"

ஹே, கௌரிபதியே, மங்களகரரே, உமது திருவடிகளின் காரியங்களை என்னவென்று உரைப்பது? யமனது மார்பில் உதை கொடுக்

தது; அபஸ்மாரம் என்ற அக்ஞானத்தையும் போக்கடிக்க வல்லது; கைலையங்கிரியில் ஸஞ்சரிக்கிறது; இன்னும் உம்மை நமஸ்கரிக்கும் கோடிக் கணக்கான தேவர்களது தலையிலணியப் பட்ட கிரீடங்களில் உறைகிறது; இவ்வாறு இந்நான்கு வேலைகளை யும் உமது மிருதுவான திவ்விய திருவடிகள் செய்தன. இனி யாவது தாங்கள் தயவு செய்து உமது திருவடிகளுக்கு பாதரக்ஷை களை தரித்துக் கொள்ள எண்ணங் கொண்டு என்மனமாகிற இரத் தினபாதரக்ஷைகளைப் பூண்டு என்னை ஈடேற்றுவீராக.

65. "வக்ஷஸ் தாடநசங்கயா விசலிதோ வைவஸ்வதோ நிர்ஜரா:
கோடீரோஜ்வல ரத்னதீபகலிகா நீராஜநம் குர்வதே |
த்ருஷ்ட்வாமுக்தி வதூஸ்தநோதி நிப்ருதா சலேஷம் பவானீ
பதே யச்சேதஸ் தவ பாத பத்மபஜனம் தஸ்யேஹகிம் துர்லபம் ||"

ஹே, பவானீபதே, எவனது மனதானது உம்முடைய ஸேவை யிலேயே ஈடுபடுகிறதோ அவனது பெருமையை என்னென்று கூறு வது? உம்மை அவ்வாறு ஸேவிப்பவனைப் பார்த்த மாத்திரத்திலே யே யமனும் அவனைக்கண்டு, எங்கே உமது பக்தனை அணுகினால் (முற்காலத்தில் மார்க்கண்டேயனைக் காக்குமாறு நீர் கொடுத்த) உதையை நினைத்து, பயத்தினால் ஓட்டமெடுக்கிறான். அதன்றி தேவர்களும் உமது பக்தனது பிரியத்தைப் பெற்று அதன் மூலம் உமது தயவை சம்பாதிப்பதற்காக அவர்கள் தலைகளில் தரித்துள்ள ரத்தினக்கிரீடங்களைக் கொண்டு பணிந்து பணிந்து அவ்விரத்தினங் களாலான பிரகாசத்தினால் ஹாரத்தி செய்கிறார்கள். இம்மட்டோ! முக்தி என்னும் இளமங்கை அப்பக்தனை சிறிதும் பிரியாது தழுவிக் கொண்டேயிருக்கிறாள். என்ன ஆச்சரியம்! என்ன பெருமை! ஆகலால் உமது பக்தனுக்கு இகலோகத்தில் கிடைக்கத்தகாத காரி யம் எதுதான் உண்டு?

66. "க்ரீடார்த்தம் ஸ்ருஜஸி ப்ரபஞ்சமகிலம், க்ரீடா ம்ருகாஸ்தே
ஜநா: யத்கர்ம ஆசரிதம் மயாசபவத: ப்ரீத்யை பவத்யேவதத் |
சம்போ ஸ்வஸ்ய குதூஹலஸ்ய கரணம் மச்சேஷ்டிதம் நிச்சிதம்
தஸ்மாந் மாமகரக்ஷணம் பசுபதே கர்த்தவ்ய மேவத்வயா ||"

ஹே, சம்போ, பசுபதே, ஸகல பிரபஞ்சங்களையும் உமது லீலார்த்தம் சிருஷ்டித்திருக்கிறீர். (வேதமும் "த்வைதாத்வைத ஸமுத் பூதைர் ஜகந்நிர்மாணலீலயா" என்று கூறுகிறதல்லவா?

மாணிக்கவாசகரும் "கூத்தனிவ் வானுங் குவலயமு மெல்லோமும் காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி" என்று சொல்லுகிருரன்ருே?). அவ்வாறு சிருஷ்டிக்கப்பட்ட பிரபஞ்சங்களில் உள்ள சிருஷ்டியாலான ஜன சமூகங்களும் உமது விளையாட்டிற்காக நிர்மிக்கப்பட்ட மிருகங்களாகவுள்ளார். ஆதலால் அத்தகை மிருகங்களில் ஒன்ருன நான் செய்யும் கர்மங்களெல்லாம் உமது பிரியத்தின் பொருட்டேயாகும்; உமது திருவிளையாட்டால் சிருஷ்டிக்கப்பட்ட என்னை சம்ரக்ஷிக்க வேண்டியதும் உமது கடமையல்லவா?

**67.** "ஸஹஸ்ரவித பரிதோஷ பாஷ்பபூரஸ்புட புலகாங்கித சாரு போக பூமிம் | சிரபத பலகாம்க்ஷி ஸேவ்யமானாம் பரம ஸதாசிவ பாவநாம் ப்ரபத்யே ||"

ஹே, பிரபோ, பலவிதமான ஆநந்தக்கண்ணீர் பெருகி, அங்கமெல்லாம் மயிர்க் கூச்சுண்டாகி, பக்தியென்னும் நிலைமையைடைந்து அதன் பயனையடைய காரணமாயுள்ள போகபூமி என்றே இவ்வுலகை எண்ணுவேன். அவ்வாறு எண்ணியிருக்கும் அப்பக்தி நிலை என்னை சாசுவதமான மோக்ஷசாம்ராஜ்யத்தை விரும்புகிறவர்களால் ஸேவிக்கப்பட்டவராயும் மேலுக்கும் மேலான பரமசிவமாயும் உள்ள உமது தியானத்தைப் பெறுமாறு செய்கிறது.

**68.** "அமிதமுதம்ருதம் முஹு: துஹந்தீம் விமலபவத் பதகோஷ்டம் ஆவஸந்தீம் | ஸதய பசுபதே ஸுபுண்யபாகாம் மமபரிபாலய பக்திதேனுமேகாம் ||"

ஹே, நல்லதயையுடன் கூடியவரே, பசுபதே, எனது பக்தி என்பது ஒருபசுவல்லவா? அப்பக்தி கரைகடந்த சந்தோஷமான அம்ருதம் என்றபாலை எப்பொழுதும் கொடுக்கும்; மலரகிதமான உமது திருவடிகள் என்ற தொழுவத்தில் கட்டி வசித்துவருவது; உயர்வான புண்ணியம் என்பதற்கு காரணமாயிருக்கிறது. ஆகையால் பக்தி என்ற அப்பசுவை காப்பாற்றுவீராக.

**69.** "ஜடதா பசுதா களங்கிதா குடில சரத்வஞ்ச நாஸ்தி மயிதேவ | அஸ்தி யதிராஜ மௌளே பவதாபரணஸ்ய நாஸ்தி கிம் பாத்ரம் ||"

ஹே, தேவேச, மூடமான ஜடத்வமும், அறிவின்மையான பசுத்வமும், குருதாரஹரணமான களங்கத்வமும், கோணலாய் ஸஞ்ச

ரிக்கும் குடில சாத்வமும் சந்திரனிடத்தேயுள்ளனவன்றோ? அக்குணங்கள்யாவும் உமது திருவருளால் என்னிடம் இல்லையே. அவ்வாறு இருக்க, அத்தோஷங்கள் நிறைந்த சந்திரனும் தேவரீர் ஆபரணமாகக் கொள்ள தகுதியை அடைந்துள்ளவனாகிறான். அக்குற்றங்களில்லாத நான் அத்தகுதியடையக் கூடாதோ?

**70.** அரஹஸிரஹஸி ஸவதந்த்ர புத்யா பரி வஸிதும் ஸுலப: ப்ரஸன்னமூர்த்தி: | அகணிதபலதாயக: ப்ரபுர்மே ஜகததி கோஹ்ருதி ராஜசேகரோஸ்தி ||"

ஸமர்த்தராயும் கிருபை என்னும் ஒளியால் பிரகாசிக்கும் சரீரத்தைக் கொண்டவராயும், அளவுக்கடங்காத பலன்களையளிப்பவராயும், ஜகங்களுக்கெல்லாம் அதிபராயும், சந்திரசேகரராஜராயும் உள்ள, அதிசுந்தரஸார்வபௌமன் என்மனதில் வீற்றிருக்கிறார். ஆகையால் பஹிரங்கமாயும் இரஹஸ்யமாயும் தன்வயத்தமாக என் ஸ்வாதீன புத்தியுடன் அப்பெருமானை அணுகி பணிவிடை செய்ய சுலபமாய் ஆயிற்று.

**71.** "ஆரூட பக்திகுண குஞ்சித பாவசாப யுக்தை: சிவஸ்மரண பாணகணை: அமோகை: | நிர்ஜித்ய கில்பிஷரிபூன் விஜயீஸுதீந்த்ர: ஸாநந்தமாவஹதி ஸுஸ்திர ராஜலக்ஷ்மீம் ||"

நல்லபுத்தியடைந்த பெரியார்கள் மட்டுமே ஆரூடமாகிய பக்தி என்ற நாணைக் கொண்டு வணக்கம் என்ற வில்லில் பூட்டி சிவத்தியான மென்ற அம்புகளின் கூட்டங்களை விடுத்து, பாவங்கள் என்ற சத்துருக்களை நன்றாக ஜயித்து, வெற்றியடைந்தபின்னர், அதிக ஸந்தோஷத்தோடு கூட பிரம்மாதி சகல தேவர்களுக்கும் பதியான பரமசிவனது ஸாரூப்யபதமென்ற லக்ஷ்மீகரமான நிலையை அடைகிறார்கள். (பக்தர்களின் உயர்ந்தவர்க்கும் மன்மதனுக்கும் சிலேடை).

**72.** "த்யானாஞ்ஜனேந ஸமவேக்ஷ்ய தம: ப்ரவேசம்பித்வா மஹாபலிபி: ஈச்வரநாமமந்த்ரை: | திவ்யாச்ரிதம் புஜகபூஷணம் உத்வஹந்திதே பாதபத்மமிஹதே சிவதேக்ருதார்த்தா: ||"

ஓ, பிரபுவே, கிருதார்த்தமாவதற்கு ஸாதகம் சிவபாத பக்தி ஸேவை யென்று அறிந்து கொண்டேன். ஏனெனில் சிவத்யானம் என்ற அஞ்ஜனத்தைக் கொண்டு பார்த்தேன். உமது பாதபத்மஸ்

வரூபத்தை நிச்சயமாய் அறிந்து உமது திவ்விய நாமங்களான மந்திரத்தை உச்சரித்த உயர்ந்தோர்கள், அமிழ்ந்து கிடக்கும் அஞ்ஞானம் என்றதை மறைத்து வைத்திருக்கும் இடத்தைப் பிளந்து அதை பின்னப்படுத்தி, தேவர்களால் மட்டும் அடையக் கூடியதாயுள்ள, சர்ப்பாபரணரான தேவரீரது திருவடித்தாமரையை சேர்ந்து இந்த ஜன்மத்திலேயே பிறவிப்பயனை அடைந்திருப்பதைக் கண்டேன். ஆதலால் அவ்விதமான சிவபாதபக்த ஸேவையின் மஹிமையை அறியாதார் எவ்வாறு கிருதார்த்தர்களாகக்கூடும்?

**73.** "பூதாரதாமுதவஹத்ய தபேக்ஷயா ஸ்ரீபூதார எவ கிமத: ஸுமதே லபஸ்வ | கேதார மாகலித முக்தி மஹௌஷதீநாம் பாதாரவிந்தபஜனம் பரமேச்வரஸ்ய ||"

ஹே, நற்புத்தியுடையவனே, மறுபடியும் ஒன்று உன் நன்மையை நாடிக்கூறுவேன்; கேட்டுப்பயனடைவாய். ஸ்ரீதேவி, பூதேவி, இவர்களைப் பத்தினிகளாகக் கொண்ட விஷ்ணுவே எமது மஹாதேவரது திருவடிகளைக் காணவேண்டி வராகவடிவத்தை அடைந்து முயற்சிக்கவில்லையா? அத்திருவடிகளின் மஹிமையைக் காட்ட இதைவிட வேறு எவ்வாறு உரைப்பது? ஆதலால் நீயும் யாவராலும் விரும்பப்படும் மோக்ஷமென்ற சிறந்த மூலிகைகளுக்கு விளைநிலமாயுள்ள அம்மாஹேசரது திருவடித்தாமரைகளையே ஸதாகாலம் ஸேவிப்பாய்; அதை அடைந்து ஸுகம் பெறுவாய்.

**74.** "ஆசாபாசக்லேச துர்வாஸனாதி பேதாத்யுக்தை: திவ்யகந்தை: அமந்தை: | ஆசாசாடீகஸ்ய பாதாரவிந்தம் சேத: பேடீம் வாஸிதாம் மேதநோது ||"

ஹே, பிரபுவே, திகம்பரரான தேவரீரது பாதாரவிந்தமானது எனது ஆசைகள், மந்தங்கள், க்லேசங்கள் முதலான துர்வாஸனைகளாற் கட்டுண்டு இருக்கும் இக்கட்டுகளைப் போக்கடித்து என்மனமானபெட்டியில் தேவர்களுக்குரிய தன்மையான ஸுந்தரகந்தமான வாஸனையை நிறப்பி, பரிமளமாகச் செய்யவேண்டும்.

**75.** "கல்யாணிநம் ஸரஸசித்ரகதிம் ஸவேகம் ஸர்வேங்கித க்ஞம் அநகம் த்ருவல க்ஷணாட்யம் | சேதஸ்துரங்கம் அதிருஹ்யசர ஸ்மராரே நேதஸ்ஸமஸ்த ஜகதாம் வ்ருஷபாதிரூட ||"

ஹே, விருஷபவாகனரே, ஸமஸ்த உலகங்களுக்கும் நாயகரே, மன்மதனை தகித்தவரே, உமது விருஷபவாகனத்தைவிட்டு என் மனமென்ற குதிரையை அங்கீகரித்து அதில் ஏறி ஸஞ்சாரஞ் செய்வீராக! அக்குதிரை பஞ்சகல்யாணகுணங்களையுடையது; ஆசையோடு கூடி வெகு வேகமாக ஓடத்திறமை கொண்டது; ஸாரத்யம் செய்பவருடைய மனக்குறிப்பை நன்கு அறிந்து அதன்படி நடந்து கொள்ளக்கூடியது; தோஷமற்றது; சுழிமுதலிய நல்ல லக்ஷணங்கள் உள்ளது. ஆகையால் தேவரீர் ஏறிச் செல்லத் தகுதி வாய்ந்தது.

**76.** *"பக்திர்மஹேச பதபுஷ்கர மாவஸந்தீ காதம்பினீவ குருதே பரிதோஷவர்ஷம் | ஸம்பூரிதோபவதி யஸ்ய மனஸ்தடாகஸ்தஜ் ஜன்மஸஸ்யமகிலம் ஸபலஞ்ச நாந்யத் ||"*

ஆஹா, சிவபக்தியின் மஹிமை என்னென்று கூறுவது! அது மஹேச்வரரது திருவடித்தாமரையான ஆகாயத்தில் வசிக்கிறது; மேகக்கூட்டங்கள் போல ஆநந்தம் என்ற மழையை உண்டுபண்ணி வர்ஷிக்கிறது. ஆதலால் எவனுடைய சித்தமென்ற தடாகம் அவ்வாநந்த மழையால் நிறம்பி விடுகிறதோ அவனுக்குப் பிறப்பென்னும் பயிர் முற்றிலும் விளைந்து ஸபலமாகிறது. அவ்வாறு பக்தியற்றவனது ஜன்மங்கள் அவ்வித பிரயோஜனத்தை யடையாது என்பது நிச்சயம்.

**77.** *புத்திஸ்திரா பவிதுமீச்வர பாதபத்ம ஸக்தா வதூர் விரஹிணீவ ஸதா ஸ்மரந்தீ | ஸத்பாவநாஸ்மரணதர்சன கீர்த்தனாதி ஸம்மோஹிதேவ சிவமந்த்ர ஜபேந விந்த்தே ||"*

ஹே, ஈச்வர, பர்த்தாவைப் பிரிந்த உத்தம பத்தினியைப் போல் என்மனம் தத்தளித்துத் துன்புறுகிறதே! ஏனெனில் எனது புத்தி உமது திருவடித்தாமரைகளுடன் ஸம்பந்தம் பெற்றது; எப்போதும் உம்மையே தியானித்திருக்கிறது; சிவமந்திர ஜபமாகிற மோஹத்தால் மயக்கங்கொண்டது; உம்மோடு சதாகாலம் ஒன்றுபட்டிருப்பதற்காகவே உமது திருவடிகளையே நினைத்தும், தரிசித்தும் புகழ்ந்தும் வருகிறது. அதனால் உம்மை பிரியாதிருக்கவேணுமே என்ற விசாரத்தையும் அடைகிறது.

78. "ஸதுபசார விதிஷ்வநு போதிதாம் ஸவிநயாம் ஸுஹ்ருதம் ஸமுபாச்ரிதாம் | மமஸமுத்தர புத்திமிமாம் ப்ரபோ வரகுணேன நவோட வதூமிவ ||"

ஹே, பிரபோ, இன்னும் எவ்வாறுரைப்பது! எனது புத்தியை அங்கீகரிப்பீர்; அதை உமது பார்பை போலவே வகிக்க வேண்டுகிறேன். ஏனெனில் கற்புடைய மனைவியின் குணங்களும் என் புத்தியிடத்தில் உள்ளன. அது ஸத்தான உமது திருவடிகளை சதாகாலம் பூஜிப்பதிலேயே ஈடுபட்டிருக்கிறது; சுத்தமாயுள்ளது; விநயத்தோடு கூடியது; மேலான குணங்களுடைய உம்மையே தஞ்சமென்று எண்ணும் சுபாவத்தையுமுடையது.

79. "நித்யம் யோகி மநஸ்ஸரோஜதள ஸஞ்சாரக்ஷம: த்வத்க்ரம: சம்போ தேந கதம் கடோரயமராட்வக்ஷ: கவாடக்ஷதி: | அத்யந்தம் ம்ருதுலம் த்வதம் க்ரியுகளம் ஹாமே மனச்சிந்தயத்யேதல்லோசந கோசரம் குருவிபோ ஹஸ்தே நஸம்வாஹயே ||"

ஹே, ஸர்வவ்யாபியே, சம்போ, உமது திவ்வியமிருதுவான பாதங்கள் யோகிகளது மனதாகிற தாமரைப்பூவின் இதழ்களிலே கூடியிருப்பவை; அத்தகைய மிருதுவான பாதங்கள் மிக கெட்டியான யமனது கதவுபோன்ற மார்பை எவ்வாறு உதைத்ததோ? அப்பாதயுகளங்கள் நோவுற்றனவோ? அவைகளைப் பற்றிப் பிடித்து சிச்ருஷை செய்ய என்மனது மிக ஊக்கத்துடன் இச்சிக்கிறது. ஆகையால் அத்திவ்விய பாதங்களை நான் காணும்படி கிருபை செய்வீர். அவைகளை என்கைகளினால் தாங்கிப் பிடித்து வருகிறேன்.

80. "ஏஷ்யத்யேஷ ஜநிம் மனோஸ்ய கடிநம் தஸ்மிந்நடா நீதிமத்ராக்ஷாயை கிரிஸீம்நி கோமலபதந்யாஸ: புராப்யாஸித: | நோசேத் திவ்யக்ரஹாந்தரேஷு ஸுமனஸ்தல்பேஷு வேத்யாதிஷு ப்ராய ஸ்ஸத்ஸு சிலாதலேஷு நடநம் சம்போ கிமர்த்தந்தவ ||"

ஹே, சம்போ, உமது கருணையே கருணை; உமது லீலாவினோதத்தின் சூக்ஷ்மம் அறிந்தேன். ரமணீயமான கிரகமத்யப்ரதேசம், புஷ்பாசயனம், உயர்ந்த திண்ணை திட்டாணிகள், முதலான சிறந்த இடங்கள் இருக்க, அவைகளை யெல்லாம் விட்டுவிட்டு கடினமான சிலாப்ரதேசத்தில் கிரமக்கிரமமாய் நீர் நர்த்தனம் செய்யும் காரணத்தையும் அறிந்தேன். அச்செயலும் உமது அபாரமான கருணை

யையே எடுத்துக் காட்டுகிறது. எவ்வாறு எனில் :—என் போன்ற ஜந்து இவ்வுலகில் பிறக்கப்போகிறான்; நாம் இவனைக் காப்பாற்ற வேணும்; இவனது மனம் மிக கடினமாயுள்ளது; அதில் நாம் சஞ்சரிக்கவேணும்; அவ்வாறு இவனை ரக்ஷிப்பதற்கு நமது மிருதுவான பாதங்களை கடினமானவஸ்துவின் மீது நர்த்தனம் செய்து பழக்கிக் கொள்வோம்; என்ற இவ்விதமான கருணை கூர்ந்த எண்ணங் கொண்டே நான் ஜனிப்பதற்கு முன்னமேயே உமது பாதங்களை பழக்கிக் கொண்டிருக்கிறீர். இதுவல்லவா, தயை, கருணை, என்பதற்கு அத்தாக்ஷி!

**81.** கஞ்சித் காலமுமாமஹேச பவத: பாதாரவிந்தார்ச்சனை: கஞ்சித் யான ஸமாதி பிச்சநதிபி: கஞ்சித்கதாகர்ணனை: | கஞ்சித் கஞ்சித வேக்ஷணைச்சநுதிபி கஞ்சித்தசாமீத்ரசிம்ய: ப்ராப்னோதி முதார்ப்பிதஜநாஜீவன் ஸமுக்த: கலு ||"

ஹே, உமாமஹேச்வரரே, ஜீவன்முக்தன் யாவன் என்று அறிந்து கொண்டேன். எவன் சிலசமயம் உமது திருவடித்தாமரைப்பூஜையிலும், சிலகாலம் உமது தியான சமாதிகளிலும், சில காலம் உம்மை நமஸ்கரிப்பதிலும், சிறிது காலம் உமது திவ்ய கதாச்ரவணத்திலும், சிலகாலம் உம்மை தரிசிப்பதிலும், சிலகாலம் உம்மைத் துதிப்பதிலும், பொழுதை கழிக்கிறானோ, அவனே உயிருடனிருக்கும்போதே ஜீவன் முக்தியை யடைந்தவனாவன்.

**82.** "பாணத்வம் வ்ருஷபத்வம் அர்த்தவபுஷா பார்யாத்வம் ஆர்யா பதே கோணித்வம் ஸகிதாம்ருதங்கவஹதா சேத்யாதிரூபம் ததௌ | த்வத் பாதேநயனார்பபணஞ் சக்ருதவான் த்வத்தேஹ பாகோ ஹரி: பூஜ்யாத் பூஜ்ய தரஸ்ஸ ஏவஹிநசேத் கோவா ததந்யோதிக: ||"

ஹே, அம்பிகாபதியே, விஷ்ணுவே பாணத்வம், (உமது பாணமாயிருத்தல்—திரிபுரதகன காலத்தில்) விருஷபத்வம், (மால்விடையாயிருத்தல்) பாதிசரீரத்தில் பார்யத்வம் (விஷ்ணுவும் சக்திவடிவமாயும் மோஹினி அவதாரமாயும், பார்யையாயிருத்தல்), வராகத்வம் (திருவடிகாணவராகமாய்த் திரிதல்), சிநேகத்வம் (சிவபெருமானின் அத்யந்த நட்பை யடைதல்), ம்ருதங்கத்தை சுமத்தல் (தாண்டவநடனகாலத்தில் மிருதங்கம் வாசித்தல்), இவ்விதமான பல உருவங்களைத் தரித்ததுமல்லாமல் உமது திருவடிகளை அர்ச்

சிக்க தம்கண்ணை உபயோகப்படுத்தியும் (தினந்தோறும் சிவனை ஆயிரம் கமலங்கள் கொண்டு அர்ச்சித்து வந்ததில் ஒருநாள் ஒரு கமலம் குறைவாயிருப்பது கண்டு தம் கண்ணையே பறித்து அர்ச்சித்ததன் காரணமாய் கமலக்கண்ணனெனவானது) உம்மை தொழுது வந்ததால், பிரம்மாதி தேவர்கள் யாவரினும் மேம்பட்ட பூஜ்யனாகிறான். அவ்வாறு செய்யாத மற்றைத் தேவர்களும் கூட அத்திருமாலின் பெருமையையடையக் கூடாதவர்கள் ஆயினரல்லவா?

**83.** "ஜநநம்ருதியுதாநாம் ஸேவயா தேவதாநாம் நபவதி ஸுகலேசஸ்ஸம்சயோ நாஸ்தி தத்ர | அஜநிமம்ருதரூபம் ஸாம்பம் ஈசம்பஜந்தே யஇஹ பரமஸௌக்யம்தேஹி தன்யாலபந்தே ||"

தன்யர் என்பவர் யாரென்று அறிந்தேன். தேவர்களுக்கும் பிறப்பு இறப்பு உண்டு. அவர்களை ஸேவிப்பதில் அற்பசுகமும் உண்டாகிறதில்லை. இதில் சந்தேகமே கிடையாது. பிறப்புள்ளதாலேயே தேவர்களாயிருந்தபோதிலும் இறப்பை அடைகின்றனர். ஆகலின் பிறப்பற்றவரே உயர்ந்தவரல்லவா? அவ்வாறு பிறப்பேயில்லாமலும், அதனால் மரணமில்லாதவரான அம்பாள் சமேதரான பரமசிவனை எவர் இந்நரஜன்மத்தில் ஸேவை செய்கிறாரோ அவரே தான் தன்னியராவர் இந்த நரஜன்மமெடுத்த பயனையடைந்தவராவார்கள். அவர்களே பரமஸௌக்கியம் அடையப் பெறுபவர்கள்.

**84.** "சிவ தவ பரிசர்யா ஸந்நிதாநாய கௌர்யா பவ மமகுணதுர்யாம் புத்திகன்யாம் ப்ரதாஸ்யே | ஸகலபுவன பந்தோ ஸச்சிதாநந்தஸிந்தோ ஸதய ஹ்ருதயகேஹே ஸர்வதாஸம் வஸத்வம் ||"

ஹே, மங்களஸ்வரூபியே, சகல புவனங்களையும் சிருஷ்டி செய்பவரே, சகல புவனங்களில் உள்ள ஜீவன்களனைத்துக்கும் உற்ற உறவினரே; ஸத்து, சித்து, ஆநந்தம் என்னும் பிரவாகங்கள் அடங்கியுள்ள சமுத்திரமே, பரமகிருபாலுவே, உம்மை ஒரு வரம் வேண்டுகிறேன். உம்மை சதாகாலம் உமது ஸமீபமேயிருந்து பூஜிப்பதற்கும் ஆநந்தத்தை அனுபவிப்பதற்கும் எனது மதி என்னும் கன்னிகையை உமக்கு அர்ப்பணம் செய்கிறேன். எனது மனமென்னும் அந்தப்புரத்தில் தேவரீர் தம் பார்யையான பார்வதிதேவியுடன் கூட தங்கியிருந்து வரவேண்டுகிறேன்.

**85.** "ஜலதி மதநதக்ஷோ நைவ பாதாள பேதீகச வநம்ருக யாயா ந்நை வலுப்த: ப்ரவீண: | அசந குஸும பூஷா வஸ்த்ர முக்யாம் ஸபர்யாம் கதய கதமஹந்தே கல்ப்பயா நீந்துமௌளே || "

ஹே, இந்துசேகரரே, உம்மைத் தொண்டு செய்து பிரஸித்தியடைந்தவர்களின் குணம் ஒன்றும் என்னிடம் இல்லையே! உமக்கு ஆகாரம், புஷ்பம், பூஷணம், ஆடை, முதலானயாவும் என்னால் அளிக்க சக்தி இல்லையே! ஏனெனில் கடலைக் கடையும் சாமர்த்தியம் பெற்றேனேயாயின் உமக்கு ஆகாரமாக ஆலத்தை அளிக்கக் கூடும். பாதாளலோகத்தை பிளக்கும் சக்திவாய்ந்துள்ளேனாயின் அங்குள்ள நாகங்களை ஆபரணமாக கொடுக்கக் கூடும். வனப்பிரதேசங்களில் வேட்டையாட சாமர்த்தியம் இருப்பின், யானையின் தோலை வஸ்திரமாக அளிக்க இயலும். ஆகையால் நான் என் மனமார எவ்விதம் உம்மை பூஜிக்கக் கூடும்? நீரே அவ்விதத்தை சொல்லியருளல் வேண்டும்.

**86.** "பூஜாத்ரவ்ய ஸம்ருத்தயோ: விரசித: பூஜா கதம்குர்மஹே பக்ஷித்வ ந்கசவாகிடித்வமபி நப்ராப்தம் மயா துர்லபம் | ஜாநே மஸ்தகம் அங்க்ரிபல்லவம் உமாஜாநே நதேஹம் விபோ நக்ஞாதம் ஹிபிதாமஹேந ஹரிணாதத்வேந தத்ரூபிணா || "

ஓ, உமாபதியே, உம்மைப் பூஜிப்பது மிக எளிதோ? இல்லை. பூஜாத்திரவியங்கள் அனைத்தையும் சேகரித்தாலும் உமது பூஜையை எவ்வாறு செய்ய இயலும்? உமது சிரஸையும் பாதத்தையும் யாவர் அறிவர்? அச்சிரஸையும் பாதத்தையும் அறிய (பிரும்மா விஷ்ணுவைப் போல) ஹம்ஸபாவத்தையும், வராக பாவத்தையும் யான் பெறுதல் முடியுமோ? அவ்வுருவங்களைப் பெற்றேனேயாயினும் உமது சிரம் பாதம் இவைகளை யான் காணக்கூடுமோ? அவ்வுருவங்களையடைந்த பிரம்மா விஷ்ணுக்களே உமது முடி அடி தேடிக் காணாது கலக்கமுற்றார்களன்றோ? ஆகையால் அற்பனை நான் எவ்விதம் உமது திருமுடியையும் திருவடியையும் கண்டுதரிசித்து பூஜிக்கவல்லவனாவேன்?

**87.** "அசநம் கரளம் பணீகலாபோ வஸனம் சர்ம்மச வாஹநம் மஹோக்ஷ: | மமதாஸ்யஸிகிம் கிமஸ்தி சம்போ தவ பாதாம் புஜ பக்திமேவதேஹி || "

ஓ, மங்களத்தையுண்டு பண்ணுபவரே, உமக்கு ஆகாரமோ (ஆலாஹலம் என்ற) விஷம்; ஆபரணமோ ஸர்ப்பங்கள்; வஸ்திரமோ (யானைத்) தோல்; வாகனமோ (கிழத்தன்மை வாய்ந்த) பெரிய எருது. ஆகையால் எனக்கு எதைக் கொடுப்பீர்? இவைகளில் எனக்கு வேண்டியது யாது? ஆயினும் அன்பெனும் வஸ்துவின் இருப்பிடமான உமது திருவடித்தாமரையை எனக்கு கொடுத்தருள்வீர்.

**88.** "யதாக்ருதாம் போகிதிஸேது பந்தன: கரஸ்தலாத: க்ருத பர்வதாதிப: | பவானிதே லங்கித பத்ம ஸம்பவஸ்ததா சிவார்ச்சாஸ்தவ பாவநக்ஷம: ||"

ஓ, சிவ, நான் ஸமர்த்தனே யில்லையென்பது அறிவேன். ஸமுத்திரத்தில் அணையைக் கட்டிய ஸ்ரீராமனைப் போலவும், தமது கையைக் கொண்டே (அகந்தையை அடக்க) பூமியின் கீழ் விந்தய பர்வத்தை அமிழ்த்திய அகஸ்தியரைப் போலவும், தாமரை பீடத்தில் அதிசயத்துடன் வீற்றிருந்து அபூர்வசிருஷ்டி செய்யும் பிரமனைப் போலவும் நான் சமர்த்தனன்று. ஆகையால் எவ்வாறு உம்மை, பூஜிக்கவும் துதிக்கவும் தியானிக்கவும் எனக்கு சக்திவரும்? ஆயினும் உமது அருள் அடைவேனாயின் அக்காரியங்களை நான் எளிதில் செய்ய இயலுமன்றோ?

**89.** "நதிபி: துதிபி: த்வமீச பூஜாவிதிபிர்த்யாந ஸமாதிபி: நதுஷ்ட: | தநுஷா முஸலேந சாச்மபிர்வா வததே ப்ரீதிகரம் ததாகரோமி ||"

ஓ, ஈசுவரரே, உம்மை ஆச்ரயித்து பேரானந்தமடைந்தவரை எண்ண எண்ண ஆச்சரியம் உண்டாகிறதே. உமக்கு ஸந்தோஷம் உண்டாக்க வகையை எண்ணினும் ஆச்சரியம் உண்டாகிறதே. நமஸ்காரம், ஸ்தோத்திரம், பூஜை சமாதி த்யானம் முதலான காரியங்களை எண்ணினாலும் சந்தேகமுண்டாகிறதே. பூஜை, துதி, த்யானம், சமாதி இவைகளால் ஏற்படும் சந்தோஷத்தை விட மேலாகவே, வில்லடிபடுவதிலும் (அர்ச்சுனனால்), கற்களாலடிபடுவதிலும் (சாக்கியரால்), சந்தோஷங் கொண்டிருக்கிறீர். ஆகையால் எவ்வித பணிவிடையால் உமது பிரியத்தை சம்பாதித்துக் கொள்ளக்கூடும் என்று எனக்கு தெரியவில்லையே. அதனால்

உமக்கு பிரியம் ஏற்படக்கூடிய விதத்தை எனக்கு தயவு செய்து சொல்லியருளல் வேண்டும்.

**90.** " வசஸா சரிதம் வதாமிசம்போ ரஹமுத்யோக விதாஸுதே ப்ரஸக்த: | மநஸாக்ருதி மீச்வரஸ்ய ஸேவே சிரஸா சைவ ஸதா சிவம்நமாமி || "

ஓ, சம்போ, உம்மிடம் ஒருவிதப்படுத்தி மனதை ஏகைகபாவமாய் நிறுத்தி உம்மையடையும் வழியை அறியாத அறிவிலியாயிருக்கிறேன். இது உமக்குத் தெரிந்த விஷயமே. ஆயினும் மங்களஸ்வரூபியான உம்மை எனது புல்லிய வசனத்தால் சொல்லி உமது சரித்திரத்தை உரைக்கிறேன். ஸர்வேச்வரரான உமது திரு உருவத்தை எனது அற்பமனதைக் கொண்டு ஸேவிக்கிறேன். சுபகாரணரான உம்மை எனது சிரஸினால் நமஸ்கரிக்கிறேன். இவைகளை பெரியமனது செய்து ஏற்றருள்வீர்.

**91.** " ஆத்யா வித்யா ஹ்ருத்கதா நிர்க்கதாஸீத் வித்யா ஹ்ருத்யா ஹ்ருத்கதா த்வத் ப்ரஸாதாத் | ஸேவே நித்யம் ஸ்ரீகரம் த்வத் பதாப்ஜம் பாவே முக்தேர் பாஜனம் ராஜ மௌளே || "

ஓ, சந்திரராஜசேகரரே, உமது கருணானுக்ரகத்தால் மனதையடைந்து ஆதிகாலம் முதல் நிலைபெற்றிருந்த அஞ்ஞானம் வெளியேயகன்று விட்டது. மனோபந்தத்தை அறுக்கவல்ல பிரம்மஞானம் எனது மனதில் உதயமாயிற்று. அதனால் சம்பத்தைக் கொடுப்பதும் முக்திக்கு இருப்பிடமாயும் உள்ள உமது திருவடித் தியானத்தை என்மனதில் பாவித்து வருகிறேன். அப்பஜனையை ஏற்றுக் கொள்வீர்.

**92.** " தூரீக்ருதானி துரிதானி துரக்ஷராணி தௌர்ப்பாக்ய துஃக துர்அஹங்க்ருதி துர்வசாம்ஸி | ஸாரம் த்வதீய சரிதம் நிதராம் பிபந்தம் கௌரீச மாமிஹஸமுத்தா ஸத் கடாக்ஷை: || "

ஓ, கௌரீகாந்த, பிரமனால் எழுதப்பட்ட என்தலை இழிவெழுத்தும், எனது பாவகர்மங்களாலுண்டான தோஷங்கள், தௌர்ப்பாக்யம், துக்கம், துர் அகங்காரம், துர்வசனம் முதலான யாவும் என்னிடமிருந்து உமது ஸத்கடாக்ஷ விசேஷத்தால் தூரத்தே யொதுக்கி ஓட்டப்பட்டன; ஸாரமாயுள்ள உமது திவ்விய

சரித்திரங்களையே கேட்டு உட்கொள்ளுகிறேன். ஆகையால் இனி மேலாயினும் என்னை இஜ்ஜன்மத்திலேயே கரையேற்றியருள்வீர்.

**93.** "ஸோம கலாதர மௌளௌ கோமல கநகந்தரேமஹா மஹஸி | ஸ்வாமிநி கிரிஜாநாதே மாமக ஹ்ருதயம் நிரந்தரம் ரமதாம் ||"

ஓ, மனமே, நீ, சந்திரனை முடியில் தரித்தும், நீர் நிறைந்த மேகம் போல் கறுத்த கண்டத்தைக் கொண்டும், எல்லாப் பொருள்களையும் தமக்கேஸ்வாதீன மாக்கியும் விளங்கும் பார்வதிதேவியின் பதியாயுள்ள உயர்ந்த தேஜோமயஸ்வரூபியிடத்திலேயே எப்போதும் ரமித்திருப்பாய். அவ்வாறாயின் ஈறிலா இன்பமடையப் பெறுவாய்.

**94.** "ஸாரஸனாதே நயனே தாவேவகரௌ ஸஏவக்ருதக்ருத்ய: | யாயேயௌயோ பர்க்கம் வததீக்ஷேதே ஸதார்ச்சத ஸதார்ச்சத: ஸ்மரதி ||"

எந்த நாவானது ஈசுவரரைத் துதிக்கிறதோ அதுவே நாக்கு எனத்தகும்; எந்தக் கண்கள் ஈசுவரரைக் காண்கின்றனவோ அவைகளே கண்கள் எனத்தகும்; எந்தக் கைகள் சிவபூஜைகள் செய்கிறனவோ அவைகளே கைகள்; எந்த பக்தன் ஈசுவரரை ஸ்மரிக்கிறானோ அவனே பக்தன்; அவனே முக்தன்; அவனே தன்யன்.

**95.** "அதிம்ருதுலௌ மமசரணாவதி கடிநம் தேமனோபவாநீச | இதிவிசித்ஸாம் ஸந்த்யஜ சிவ கதமாஸீத் கிரௌ ததாப்ரவேச: ||"

ஓ, மங்களத்தைச் செய்பவரே, பவானீபதியே, உமது பாதங்கள் மிகவும் மிருதுவானவை யென்றும் எனது மனமோ மிகக்கடினமானது என்றும் சந்தேகம் உண்டாக அவசியமேயில்லை; அவ்வாறான சந்தேகத்தை ஒழித்துவிடவேணும். ஏனெனில் மிகக் கடினமான விடங்களில் உமக்கு பாதங்களை வைக்க வருத்தமாகுமானால் வெகு கெட்டியாயுள்ள பர்வதத்தில் நீர் சதாகாலம் சஞ்சரிக்கவில்லையோ?

**96.** "தைர்யாங்குசேன நிப்ருதம் ரபஸாத் ஆக்ருஷ்ய பக்தி ச்ருங்கலயா | புரஹரசரணாலானே ஹ்ருதயமதே பம்பதான சித்யந்த்ரை: |"

ஓ, திரிபுரஸம்ஹாரரே, என்மனமெனும் (மதங்கொண்ட) யானையை தைர்யம் என்ற அங்குசத்தால் வேகமாய் இழுத்து ஸ்வாதீனம் செய்து, உமது பக்தி ஸேவை என்ற சங்கிலிகளால் உமது திருவடியெனும் கட்டுத்தறியில் பிரம்ம ஞானம் என்ற யந்திரங் கொண்டு அசைவற்றிருக்குமாறு கட்டியருள்வீர்.

**97.** "ப்ரசரத்யபித: ப்ரகல்பவ்ருத்யா மதவாநேஷமந: கரீ கரீயாந் | பரிக்ருஹ்யநயே நபக்தி ரஜ்வாபரம ஸ்தாணுபதம் த்ருடன்னயாமும் ||"

ஓ, பரத்துக்கும் பரமாயுள்ளவரே, மதங்கொண்டும் பெரிதாயுமுள்ள என்மனம் என்ற யானையானது அதன் கம்பீர துர்நிவார வியாபாரத்தால் கண்ட இடங்களிலும் திரிகின்றது. அதை பக்தியெனும் கயிறு கொண்டு நயமாக ஸ்வீகரித்து ஸ்திரமாய் (சாசுவதமாய்) உள்ள பதமான மோக்ஷத்தை யடைந்து எப்போதும் அங்கேயே நிலைபெற்று இருக்குமாறு அருள் செய்யவேண்டுகிறேன்.

**98.** "ஸர்வாலங்கார யுக்தாம் ஸரள பதயுதாம் ஸாது வ்ருத்தாம் ஸுவர்ணாம் ஸத்பி: ஸம்ஸ்தூயமாநாம் ஸரஸ குணயுதாம் லக்ஷிதாம் லக்ஷணாட்யம் | உத்யத்பூஷா விசேஷாம் உபகத விநயாம் த்யோத மானார்த்த ரேகாம் கல்யாணீம் தேவகௌரீ ப்ரிய மமகவிதா கந்யகாம்த்வம் க்ருஹாண ||"

ஓ, தேவேச, பார்வதீரமண, அடியேன் கவனம் செய்துள்ள இத்துதியை தேவரீர் ஏற்றருள்வீர் : அது ஸமஸ்தமான உவமானம் முதலான அலங்காரங்கள் கூடியது ; ஆயினும் சுலபமாக யாவரும் அறியத்தகுந்த பதங்கள் கொண்டுள்ளது ; சிலாக்கியமான அணி வகைகள் உடையது ; சிறந்த எழுத்து அக்ஷரங்களைக் கொண்டது; வித்வான்களும் கொண்டாடத்தக்க பெருமை வாய்ந்தது ; (பக்தி முதலிய) நல்ல ரஸகுணங்கள் அடங்கியது ; லக்ஷியம் அடையப் பெறும் வஸ்துவை குறிப்பிப்பது ; காவ்ய இலக்கணத்தில் வழுவற்றது ; விளங்கக் கூடிய சப்தாலங்காரமும் இருப்பது ; வேண்டிய விநயத்தையும் வெளிப்படுத்துவது ; புஷ்டியாயுள்ள அர்த்தத்தை அடக்கியுள்ளது ; படிப்பவர்களுக்கு ஸர்வ மங்களத்தையும் உண்டு பண்ணக் கூடியது. ஏனெனில் உமது புகழையும் பெருமையையும் கூறுவதே காரணம். ஆகையால் அதை ஏற்றருளல் வேண்டும்.

(கவனம் என்ற கன்னிகை என்ற கருத்து கொள்ளுங்கால்:— பலவகை ஆடைகள் முதலானவைகளால் அலங்கரிக்கப்பட்டும், மிருதுவான அடி நடையோடு கூடியும், மேன்மையான நன்னடத்தை கொண்டும், நல்ல நிறத்தையடைந்தும், பெரியோர்களாலும் கொண்டாடத்தக்கவளாயும், சிருங்காரம் முதலான நற்குணங்கள் கொண்டும், யாவராலும் சிறந்தவளென்று குறிப்பிடத்தகுந்ததாயும், பிரகாசிக்கும் ஆபரணங்களால் விளங்கியும், அடக்கம் முதலான சிறந்த வழக்கம் பழக்கங்களை, கொண்டும், பிரகாசிக்கின்ற தனரேகையை உடையவளாயும், மங்களரூபியாயுமுள்ள எனது கவனம் என்ற சிறந்த கன்னிகையை ஏற்றருள்வீராக.)

99. "இதந்தே யுக்தம்வா பரமசிவ காருண்ய ஜலதே கதௌ
திர்யக்ரூபம் தவபத சிரோதர்சனதியா | ஹரிப்ரும்மாணௌ
தௌ திவிபுவி சரந்தௌ ச்ரமயுதௌ கதம் சம்போ ஸ்வாமின்
கதய மமவேத்யோஸி புரத: ||"

ஓ, பரமசிவ, கருணையங்கடலே, உமது திரு அடி முடி தேடி தரிசிக்க வாரகம் அன்னம் என்ற மிருக பக்ஷியான சிறுமையுள்ள ரூபங்களை அடைந்த விஷ்ணு பிரமன் இருவரும், அவ்வெண்ணத்தாலேயே உயர்ந்தவர்களாகி பூமியிலும் ஆகாயத்திலும் சஞ்சரித்து அபரிமிதமான சிரமத்தைப் பெற்றார்கள். ஆயினும், சுபத்தைச் செய்பவரே, அடியேன் முன்பாக வெகு சுலபமாக அறியுமாறு மகா கருணை கொண்டு தரிசனம் கொடுத்தருளினீர். உமது செயல்களின் சூக்ஷமத்தை எனக்கு விளக்கிக்காட்டுவீர்.

100. "ஸ்தோத்ரேணல மஹம் ப்ரவச்மினம்ருஷா தேவா விரிஞ்சாதயஸ் துத்யாநாம் கணநா ப்ரஸங்கஸமயேத்வா மக்ர கண்யம் விது: | மாஹாத்ம்யாக்ர விசாரண ப்ரகரணே தாநாதுஷஸ் தோமவத்தூதாஸ்தவாம் விதுருத்த மோத்தம பலம் சம்போ பவத் ஸேவகா: ||"

ஓ, சம்போ, உம்மைத் துதிப்பதின் பயனை அடியேன் என்னென்று உரைப்பது! உமது பக்தர்களான பிரும்மாதி தேவர்கள், ஸ்தோத்திரம் செய்யப்பட லாயக்கானவர் யார் யார் என்று கணக்குப் பார்த்து ஒவ்வொருவரிடத்திலும் குறையுண்டென்று ஒதுக்கி, கடைசியாய் யாதொரு குறைவுமற்று துதிக்கத்தகும்

பொருளான ஒருவர் நீர்தானென்று முடிவடைந்து, உம்மையே முதல்வனென முற்றுணர்ந்தார்கள். அவ்வாறு அவர்கள் விசாரணை செய்த காலத்தில் மற்றவர்கள் யாவரும் உம்மால் இயக்கப்பட்டு (நடத்தப்பட்டு) உம்மையொட்டியே இருப்பதாயும், அவர்கள் யாவரும் பதர்கள் என்றும், அப்பதர்கள் யாவைக்கும் உள்ளே நின்று சர்வோத்தமமான தானியமாய் நீர் இருந்து, உம்மைச் சுற்றி மூடியிருந்தபதர்களாகவே அவர்கள் விளங்கினார்கள், என்று அப்பிரம்மாதி தேவர்களே முடிவடைந்தார்கள் என்றிருக்கும்போது, நான் உம்மையே உத்தமோத்தமமான பலன் (பதரற்றதான்யம்) என்று துதித்தல் பொய்யாகுமோ? உண்மையே யன்றி வேறில்லை. இதுவே சத்தியம்.

ஸ்ரீ ஸத்குரு பாதாரவிந்தார்ப்பண மஸ்து.

# PRINTING NOTICE

—:o:—

The Nathan Press, Nungumbakam, Madras, undertake the printing of Letter heads, Bill-books, Hand-bills, Receipt-books, Notices, Visiting cards, Books etc.

**Neat execution, Moderate charges** and **Prompt delivery** guaranteed.

| | Rs. | A. | P. |
|---|---|---|---|
| 1,000 Letter papers—5½ in. by 9 in.—on thick Bankpaper with your name and address printed in English or Tamil or both—in 10 tear-off pads. | 5 | 0 | 0 |
| 500 ... do. ... do. 5 pads ... | 3 | 8 | 0 |
| 1,000 Letter papers—9 in. by 11 in.—do. 10 pads. | 7 | 8 | 0 |
| 500 ... do. ... do....5 pads ... | 4 | 12 | 0 |
| 1,000 postcards —do. ... do. ... | 4 | 12 | 0 |
| 50 Gentlemen Ivory Visiting Cards—do. ... | 1 | 8 | 0 |
| 100 ... do. — do. ... | 2 | 8 | 0 |

*Half the charges in advance. Balance by V. P. P.*

# BOOK BINDING NOTICE

—:o:—

We have this department fully equipped and the work is done only by experts with the best materials.

Customers have testified that in quality, durability and finish, our binding **is the best** in this Presidency. We have hundreds of testimonials on our file.

If you want to have your books **best bound** you will send us a very small trial order and be satisfied.

Our charge for binding in half law calf and superior calico, inclusive of gold lettering and initialling is **uniform** *i. e.,* Re. 1—0—0 a volume. **Transit charges extra.**

Get a volume bound by us, compare it with the binding of any other firm and we are sure you will place all your orders only with us.

When ordering kindly mention in a slip of paper attached to each volume how your name has to be initialled.

Bar Associations which send their volumes by goods to us are requested to send us at once for quick delivery. As usual the books bound will be despatched within the fixed time.

**We await your order at once**

THE MANAGER, "SACHIDHANANDAM" OFFICE,
NUNGUMBAKAM, MADRAS.

# BOOKS FOR EVERY HINDU HOUSE-HOLD.

## SRI "GURUPADUKASTHUTHI"

**By His Holiness Sri Sankaracharya Swamigal**

**of Goverdhan Peeth, Jagannath, Puri**

in Devanagaram, Grantham & Tamil characters

**Price As. 3 a copy. Send postal stamps for 0-3-6 and you will have it by the next post.**

## "SIVANANDHA LAHAREE"

OF

## SRI SANKARACHARYA

With Tamil rendering. Published for the first time in flowing Tamil.

**As. 4 a copy. Send 0-5-0 in postal stamps** and get your copy.

THE MANAGER, "SACHIDHANANDHAM" OFFICE, NUNGAMBAKKAM, MADRAS.

If you want to read and be benefited by the thought-provoking and soul-stirring discourses of His Holiness Sri Jagatguru Sankaracharya Swamigal of Puri, in Tamil

SUBSCRIBE AT ONCE FOR

# "Sachidanandam"

A TAMIL MONTHLY JOURNAL *devoted to religion & full of illuminating articles by persons of light and leading.*

**Started with gracious BLESSINGS of H. H. Jagatguru Sankaracharya of Puri, H H Jagatguru of Kamakoti, H. H. Brahmendra Avaduthal of Sendamangalam, H. H. Vaisya Jagatguru of Nerinjipettai and all others of South India.**

**Yearly Subscription:——Re. 1 only.**

**K. JAGADISA AIYAR** Nungumbakam, Madras.